57

॥ ओं ॥

॥ श्रीगणेशाय नमः ॥

॥ अहिंसा परमोधर्मः ॥

ஸ்ரீபதரீநாராயண பக்திரஸாம்ருத பஜனை

# கீர்த்தனைகள்.

ஸ்ரீதுவாரகாநாத பதரீநாத ஜகந்நாத ராமநாத
சாரதா ஜோத்சீ கோவர்த்தநம் சிருங்கேரி
நாலுக்ஷேத்திர நாலுமடாலயக்

## கீர்த்தவனைகள்.

ஹிமாலயாதி கோகர்ணாந்த

## க்ஷேத்திர நாமாவளி.

இவை
செங்கற்பட்டுஜில்லா, கருங்குழி, ஓம்கார மடாலயம்
பிரம்மஸ்ரீ மாதவாநந்த ஸ்வாமிகளின்
மாணாக்கன் அஹிம்ஸாநந்தன்
என்னும்

**ஜெ. திருவேங்கிடம் ஆச்சாரி அவர்கள்**

இயற்றியது.

---

தஞ்சாவூர் பார்ஸ்டல் ஸ்கூல், பாஷா சதுஷ்டய பண்டித
தே. ஸு. பாலஸுப்ரம்ஹண்ய சாஸ்திரிகளால்
பரிசோதிக்கப்பட்டு

“[illegible]சை ஸ்ரீசங்கரவிலாஸ சாரதாமந்திரப் பிரஸ்ஸில்”
பதிப்பிக்கப்பெற்றது.

1925.

மொத்தபக்கங்கள் 69
ACESS No: 176930

ஓம்

ஸ்ரீகுரவே நம:



1926
RAS

மேற்கில் துவாரகை-சாரதாமடம்; வடக்கில் பதரீநாரா
யணம் ஜோதிர்மடம்; கிழக்கில் ஜகந்நாதம்-கோவர்த்
தனமடம்; தெற்கில் ராமேச்வரம்-சிருங்ககிரிமடம்
என்ற ஹிமாலயாதி-கோகர்ணாந்தமுள்ள

# ஸ்ரீ பதரிகாசிரம கீர்த்தனைகள்.

கருங்குழி

அஹிம்ஸானந்தன் என்னும்

ஜெ. திருவேங்கிடாசாரி அவர்கள்

இயற்றியது.

ஸ்ரீ பதரிகாச்ரம கீர்த்தனைகள்.

पञ्च रत्नानि ।

अद्वैतेऽतीव विख्यातं
योगेऽपि निपुणं तथा
तीर्थं श्रीमाधवानन्दं
नमामि हृदि सन्ततम् ॥ १ ॥

बौद्धादिदुष्टमतखण्डनबद्धदीक्षं
कामादिदोषरहितं निजबोधयुक्तं
शिष्यान्तरङ्गनयने निभृतान्तरङ्ग-
मामोदशीलयुततीर्थपदं नमामि ॥ २ ॥

काषायवस्त्राञ्चितसुन्दराङ्गम्
यथार्थवैराग्ययुतान्तरङ्गम्
कारुण्यशीलोद्यतदानशील-
मस्मद्गुरुं सन्ततमानतोस्मि ॥ ३ ॥

ब्रह्मानन्दसरस्वतीयकृपया प्राप्तात्मबोधप्रभः
सच्छिष्यात्मसु दर्शयत्यनुपमां यः श्रद्धयात्मप्रभाम्
कारुण्याम्बुनिधिः कनद्गुणमणिर्धर्मैकरक्षामणिः
श्रीमानेषपुनातु संसृतितमःप्राग्भारतोस्मान्गुरुः ॥ ४ ॥

शमादिषड्गुणोपेतं
यमादिनिरतं सदा
सर्वभूतदयायुक्तं
मद्गुरुं प्रणमाम्यहं ॥ ५ ॥

मुळुकुल्लु लक्ष्मीनारायणशास्त्रिणा रचितान्येतानि पञ्च रत्नानि ॥

॥ शुभम् ॥

॥ अहिंसा परमो धर्मः ॥

# ஸ்ரீ பரமஹம்ஸ மாதவாநந்தஸ்வாமிகள்

## இயற்றியது.

அணிவள மிருந்த சேதி மாசலத்தி னமர்ந்த நற் பரத மாகண்டத்
தெணியொளி வடிவாஞ் சச்சி தாநந்தத் திலகிய ஞான நல் லருளாற்
கணிதமிற் றேயஞ் சபை மடங் கோயிற் கணக்கிலாக் கூட நன்மாடம்
திணிவள ரக மண்டபங்களை தெரிசித்தேன் புரி யாத்திரை யதனில்

பார்த்த வவ்விடங்க ளெங்கினும் வேதம் பரிந்துரை சுத்தவத்துவித
மூர்த்தசற் சம்பிரதாய நற்சபையை முறையுடன் கண்டிலே னுனல்
தீர்த்தநற் றலமு மூர்த்தியுங் குடியுஞ் சேர்ந்துறை தஞ்சையம்பதியில்
தார்த்திரடோ ளெமதாத்துமத் தலைவன் றலமெலாம் புகழு நற்புலவன்

உலகெலா மேத்து மிராஜ வங்கிசத்தி லுற்றவ னற்றவ ரிசைக்கும்
பலபலச் சுருதி நுண்ணிய பொருளைப் பார்த்துயிர் யாவு நற்சுகத்தை
கலந்துய வெளியா யச்சடித் தளிக்குங் கருணைசேர் வள்ள லத்துவிதத்
தலந்தனைக் காக்குஞ் ஞானமா மேரு சகம்புக ழிராஜ கேசரியாம்

உபநிடத்தனி லுட்பொருடன்னை யுள்ளிய தெள்ளிய வறிஞர்ச்
சுபமுடனறிந்து சற்சிதாநந்தச் சுடரொளி யுருவமா யுலகர்
தபவடிவா யவதாரமாயெழுந்து தந்தருள் சற்குண கணனுங்
கபடமி லுண்மைஞானியர்க்குரிய கற்பக மின்சொல னமுதன்

அருட்பிரகாச ஞானமீவள்ள லாங்குப்புசாமி ராஜென்னும்
பொருட்கியைநாம னகத்தினிற்கண்ட புதுமையை யுறைத்திடகேண்மோ
தெருட்குணவியாசர் பாடியக்காரர் சீகணனருட் டனும்பமல
உருப்படமிடமுந் தொழுதுபேரின்ப முற்றன னென்சொல்கேன்மாதோ

இத்தகை யினிய சுத்த வுத்தம புத்தமலமா யிலங்கிய சுகமாம்
சுத்த சத்துவ வத்துவித நன்மார்க்க சுயம் பிரகாசமாய் விமல
வித்தகர் புகழுஞ் சம்பிரதாயம் விளங்கிட விளக்கிய வக நான்
தத்துவ வொளியாய் கண்டுளங் குளிர்ந்தேன் சந்ததந் தழைக்க மாமாதோ

சுகுணநற் சாரக்கிராகியாங் குப்புசாமி ராஜெனவொளிர் சுகனே
*உகுணவுற்பவமோ வலது சங்கரனே வுத்தமவியாசனே வலது
தகுணகவென வண்டிசைகழறமல சாரச நாபனே வறிவியன்
†உகுணவவகிலத் தொளிர்பரஞ்சுடரே யாதென வுரைப்பன் வாழியவே.

*உ = பிரம்மா.
†உ = சிவன்.

இப்படிக்கு,

परमहंस माधवानन्दस्वामी,

ஸ்ரீ பரமஹம்ஸ மாதவாநந்தஸ்வாமிகள்,

சங்கர பகவத்பாத ஸேவாசிரமம், தசநாம ஓங்கார மடாலயம்,

கருங்குழி, செங்கற்பட்டு ஜில்லா.

ஓம்.

பரப்பிரம்ஹணே நம:

கருங்குழி.

# ஸ்ரீமத். மாதவானந்த சுவாமிகளின்

குருசுவாமிகளாகிய

# ஸ்ரீமத். பரமஹம்ஸ சுவாமிகளின்

## துதி.

---

கட்டளைக்கலிப்பா.

வேதமாதிப் பொருள்வடிவாகிய
    மெய்யநித்தர் விபுதர்வணங்கிடுஞ்
சோதிஞான சொரூபப் ப்ரகாசநின்
    சுகுணதீரன் சுகவிழிச்சாந்துண்மாக்
கோதிலாக்குரு புஷ்கரவாசனுங்
    குளிரிமாசல முத்தரகாசிஞெண்
சாதகரிஷிகேசங் காஸ்மீரமேர்
    சகலபுண்ணிய கேத்திரமூர்த்தியே. (1)

பிரம்ஹக்ஷேத்திர தீர்த்தங்களுக்கெலாம்
    பிரியஞான குருபுஷ்கரந்தனில்
* பரமஹம்ஸ ப்ரம்ஹாநந்தஸரஸ்வதி
    பரமநாத சுவாமிகுருவெனை
உரிமையாக்கிக் குருதுரியந்தனை
    யுகந்துகாட்டிப் பொருள்வடிவாக்கிய
அரியதேவைப் பரசிவப்ரம்ஹத்தை
    ஹரித்துவாரத் தகமகிழ்யோகியை. (2)

---

* இது சுவாமிகளின் பூர்த்தியான திருநாமம்.

சாந்தஞான திவாகரமேருவைச்
 சமையநீதி வடகலைவாக்கியைப்
பாந்தளேந்திய ஞாலஜீவேசுரர்
 பரமஸத்சித் ஸுகவடிவாகவே
காந்தநெல்லிக் கனியெனக்காட்டிய
 கருணைஞான விழிப்பரங்குன்றினைப்
பூந்தண்பூரணப் புண்ணியசற்குரு
 பூசையேமறவாமற் செய்வாமரோ. (3)

என்றுமென்மனத் தோங்கிவளர்ந்தெழி
 லிலகுஞான யோகீஸ்வரராற்சுகந்
துன்றுந்தூயப் பெருவெளியாகரச்
 சுகுணவாத்தும சோதியெம்மாரியன்
நன்றுதீதென நாடிடாதென்றுமே
 நனவினிற்சுழுத்திச் சதாநிட்டைக்கண்
மன்றவேபரஹம்ஸ ப்ரம்ஹானந்த
 வள்ளல்காட்டிய வண்குழியேத்துவாம். (4)

சொரூபமோடு சகசசமாதியைத்
 தூண்டித்தூய துறவறத்துண்மையை
அருளினேடுற வாக்கியபேரறி
 வாளன்மாபரஹம்ஸ ப்ரம்மானந்த்
சரஸ்வதிச்சுக சாந்தகுணாகரத்
 தண்ணளிற்கற்ப தாருநிகர்த்தநங்
குருபான்றிகழ்சீர் சாலடியிணைக்
 கோயிலாக வகத்துறவேத்துவாம். (5)

ஓம் தத் ஸத்.

## ஸ்ரீ பதரிகாசிரம கீர்த்தனைகள்.

வந்தவாசி உபாத்தியாயர் மகா-ஈ-ஈ-ஸ்ரீ

### ஆ. அகஸ்தியப்ப முதலியாரவர்களியற்றிய

அறுசீர்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பருங்குழிவீழ் கயமென்னப் பவமாயைப் பட்டுழலுஞ்
சீவர்தம்மைக்
கருங்குழிவீழ்ந் தழுந்தாமற் கருதரியமெய்ஞ்ஞானக்
கரையிலுய்ப்பான்
மருங்குழிவாழ் சிவகாமியம்மை தனையகற்றி
* வந்தான்மலர்த்தாளேத்துங்
கருங்குழிவாழ் மாதவானந்த சிவயோகியைநங்
கருத்துள்வைப்பாம். (6)

(இதுவுமது.)

வெண்பா.

மாவார்வளவயல்சூழ் மன்னுங் கருங்குழிசைத்
தேவாதிதேவன் சிவஞானப்—பூவார்நல்
மாதவானந்த மகாயோகி பொற்பமர்செம்
பாதவானந்த முடன்பாடு. (7)

(இதுவுமது.)

அணியார் வளவயற்கண் ணம்புயநீரல்லி
திணியாராம்பை செழிப்ப—மணியார்நற்
றெங்குங்கமுகுஞ் செழிக்குங் கருங்குழிசை
மங்களஞ்சேர் மாதவனை வாழ்த்து. (8)

அறுசீர்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

புண்ணியப் புலவர் போற்றும் பூமலிதடமும்யாறும்
நண்ணியவாசச் சீத நற் கருங்குழிசைக்கண்வாழ்
கண்ணியவான்கள் சூழக் கனகநன் மடம்புனைத்த
நண்ணியமாதவப்பேர் நவல் சிவயோகி வாழ்க. (9)

* ஸ்ரீ. சங்கரபகவத் பாதாசாரிய சுவாமிகள்.

அணிபாரமலநல் லாரியாவர்த்தனத்தார் முதலோர்
பிணியானதுபோய்ச் சுகஞானமுத்தியைப் பெட்பினுறப்
பணியார்சடை திரிநேத்திரம்யாவும் பரிந்தகற்றித்
தணியாக்கடற்புவிக் கேரளத்தே நந்தவமென்பரால். (10)

அவதாரஞ்செய்து வேதாந்தநற் சூத்திரப்பாஷியங்கண்
டுவந்தானந்தம்பெறப் பீடநான்காக்கியோ னெண்பதமே [மிக
தவந்தானமாத்துமம் யாவுமென்றே மலையாளந்தனையுட் டழைத்து
வுவந்தான்விரைந்தன னுத்தரக்ஷேத்திர யாத்திரைக்கே (11)

யோகமெய்ஞ்ஞான விலக்கணத்தேர்ச்சி நன்புறுமிகு
நாகரத்தோடு திராவிடஞான நற்கோசமெலாம்
சேகரத்தோங்கு பரஹம்ஸ ஞானதிவாகரனீள்
பாகமரின்மொழிச் சர்ந்தசொரூபனும் பண்ணவனே. (12)

கருங்குழிசைக்கண்ணே சூத்திரப்பாஷியக்கார் மடத்தைத்
திருந்திடச்செய்து நிபந்தனையாவுந் தெளிவுடனே
புரிந்திடக்காட்டியோ னைம்புலச்சேட்டையைப் போக்கியொளிர்
அருந்தவர்போற்றிசெய் மாதவானந்தனுமாரியனே. (13)

---

எழுசீர்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

---

மறைகிளர் பொருளை மகிதலமறிய
வகுத்தசங்கரர் பெரும்புகழும்
பொறைகிளர்பதரி நாராயணர்பதமும்
புனைந்துரைத்தான் பலவிதமாய்
நறைகிளர்சுகந்தச் சோலையும் வளமார்
நற்கருங்குழியெனும் பதிவாழ்
முறைகிள ரஹிம்ஸாநந்தனென்றுரைக்கும்
முனி திருவேங்கடாரியனே. (14)

இதுவுமது.

அறுசீர்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

---

திருவோங்கு மறமோங்க வளர்த்தவுமைக்
கலைமகளுந் திகைபாநிற்ப
மறமோங்கு மிமயவருந் தும்புருநாரதரிவர்கள்
மகிழ்ந்து நோக்கக்
குருவோங்குஞ் சதுர்க்கேத்ர மகிமைபிரயாகைமுதற்
குறித்துத் திவ்ய
திருவேங்கடாசாரி யினியசுவை ரசமொழுகச்
செய்திட்டானே. (15)

(கட்டளைக் கலித்துறை.)

---

உள்ளம்பதைப்பற வோங்குமெஞ்ஞானத் துயருஞ்சுவை
கொள்ளக்குறையா வருள்பாட றன்னைக் கொடுத்தளித்தான்
தெள்ளத்தெளிந்தொளிர் மாதவானந்தன் றிருவருளால்
வெள்ளக்கடற் குபகாரமென்செய்யும் வியன்புவியே. (16)

---

கருங்குழி, செட்டிப்பேட்டை

ஸ்ரீமத் ச. கதிர்வேல் செட்டியாரியற்றிய

எண்சீர்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

---

சீருலவுங்குழிசையெனும் பதியின்விஸ்வன்
திருவேங்கடாசாரி யெனுமாகேசன்
பாருலவுஞ் சீர்த்திமிகு பத்தர்சூழும்
பதரிநாராயணனைப் பரிந்துபாடிச்

சாரமுளவின்னிசையோ டறிவைக்கூட்டிச்
சகத்குரு சங்கராசாரியரைப்போற்றிப்
பாரறியகீர்த்தனங்கள் பஞ்சரத்நம்
பண்ணினு னஹிம்ஸையென்று நண்ணினனே. (17)

ஞாலமிசைச் சங்கரற்குத் தாமநான்கின்
நற்சிறப்பைக் கீர்த்தனத்தா னவின்றுன்பின் னுஞ்
சாலவும் பேரறிவுடைய பெரியார்தம்மைத்
தகைமையொடுந் துதித்திட்டான் தரையிலுள்ளோர்
காலபயம் நீங்கிடவும் கருத்திலூன்றக்
கண்ணியமாங் கீர்த்தனங்கள் கழன்றனன்று
ஆலமுண்டோன் ஞாலமுண்டோ னபேதரென்பா
னறிவையறி திறம்பெற்று னஹிம்ஸையுற்றுன் (18)

தரணியதிற் சீர்த்திமிகுந் தாமம்நான்குந்
தலத்தின்மிகும் பதரிகாசிரம மொன்றுஞ்
சுரர்கண் முதல்யாவருமே தொழுதுபோற்றுந்
தோன்றலெனு மாநிசங்க ரார்யராகும்
பரனைவினைந் திருவரையிற் றமிழ்தேயத்திற்
பத்தியினுற் கீர்த்தனங்கள் பகர்ந்தாரில்லை
திறமுறவே வேங்கடாசாரி யென்பான்
செய்திட்டான் பிறவிபயம் கொய்திட்டானே. (19)

ஓம் தத் ஸத்.

ஓம்.

இப்பூவுலகின்கண் பாதகண்டத்தில் தக்ஷிண திசையில் சுகர் நதிக்கு உத்தர தீரத்தில் ஸ்ரீ ஞானவிநாயகர், ஞானகிரீசர், ஞானாம்பிகையம்மன், திருக்கோயில்கொண் டெழுந்தருளி யிருப்பதும், நீர்வளம், நிலவளம் பொருந்தியதுமாகிய திருக்குழிசை மாநகர மென்னு மிப்பதியின்கண், ஜகத்குரு ஆதி ஸ்ரீ சங்கரபகவத் பாதாசாரிய சுவாமிக ளவர்கள் ஞாபகத்தின்பொருட்டும், வட தேசத்திலிருந்து, யாத்திரைமூலமாகவரும் பிரம்மசாரிகள், சந்நியாஸிகள், கோசாயிகள், பைராகிகள், உதாசிகள், நிர்மல, ராமஸ்நேகிகள், தாதுபந்த், முதலான ஸாது மஹாத்மாக்கள் தங்குவதற்கும், அகண்ட பரிபூரண சம, தம, தயா ஸ்வரூபமே திருமேனிகொண் டெழுந்தருளியதென்னும் பரமஹம்ஸ மாதவானந்த சுவாமியவர்களால், ஸ்ரீ சங்கரபகவத்பாத ஸேவாசிரமம் (தசநாம ஓங்காரமடம்) ஆர்யமத தர்ம பரிபாலனஸபை, ஸ்ரீ பதரிநாராயண பக்திரஸாம்ருதபஜனஸங்கம், என்பனவமையப்பெற்ற மடாலயம் ஒன்று நூதனமாய் ஸ்தாபித்து ஜீவகாருண்யம், பக்தி, யோகம், ஞானம், முதலிய ஹிதோபதேசமும் ஸ்ரீவியாஸ சங்கர பூஜையும் நடத்தி வருகின்றனர். அந்தந்த வருஷம் சித்திரைமாதம் சுக்லபக்ஷம் பஞ்சமிதிதியில் ஸ்ரீ ஆசாரிய சுவாமிகளின் ஜயந்தி மஹோத்சவத்தை அநேக பஜனை ஸங்கத்துடன் நடத்தி, ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளை திருவீதிவலமும், சிறப்புறச்செய்து அக்காலத்தில் விஜயம் செய்யும் பல அன்பர்கள் சிரவணம்செய்யுமாறு, வித்வத் சிரோமணிகளாகிய ஸாது மஹாத்மாக்களால் புருஷார்த்தமடையும்பொருட்டு, வேதாந்தாதி உபந்நியாஸங்களையும் நடத்திவைத்து வருகின்றார்கள் அக்காலத்தில் அநேக ஸாதுமஹாத்மாக்களுக்கு அன்னதானமும் செய்யப்படுகிறது. ஸ்ரீமத் சுவாமிகள் அவர்களின் திருவடிகட்கு என்றுமொழியாத தீர்க்கதண்டம் புரிவதோடு இந்த ஸத்காரியம் என்றும் நடைபெறுவான்வேண்டிக் கருணைபுரியுமாறு விநயபூர்வமாயும் வேண்டிக்கொள்ளாநின்றனன்.

குறிப்பு :— மடத்தின் விஷயங்களை ஸ்ரீ சங்கரபகவத்பாத ஸேவாசிரமம் தசநாம ஓங்காரமடம் என்கிற புஸ்தகத்திலும் பார்த்துக்கொள்ளலாம்.

இங்ஙனம்,

ச. கதிர்வேல் செட்டியார்,

செட்டிப்பேட்டை,

கருங்குழி.

## श्री गुरुपरंपरास्तुतिः

शास्त्रं शारीरमीमांसा देवस्तु परमेश्वरः ।
आचार्याः शङ्कराचार्याः सन्तु मे जन्मजन्मनि ॥
सदाशिवसमारम्भां शङ्कराचार्यमध्यमाम् ।
अस्मदाचार्यपर्यन्तां वन्दे गुरुपरम्पराम् ॥ १ ॥
शिवं ज्ञानोपदेष्टारं विष्णुं धर्मोपदेशकम् ।
विधिं वेदप्रवक्तारं गुरुं मूर्त्तित्रयं भजे ॥ २ ॥
वसिष्ठं ब्रह्मविच्छ्रेष्ठं शक्तिं योगविदां वरम् ।
पराशरं पुराणज्ञं प्रणतोऽस्मि मुनित्रयम् ॥ ३ ॥
व्यासं वेदान्तसूत्राणां वक्तारं बादरायणम् ।
श्रीशुकं सूत्रकारंच भजे वेदान्तदेशिकौ ॥ ४ ॥
श्रीमद्गौडपदाचार्यमद्वैतार्थप्रबोधकम् ।
गोविन्दभगवत्पादमद्वैताचार्यं माश्रये ॥ ५ ॥
अद्वैतस्थापनाचार्यं शङ्करं लोकसद्गुरुम् ।
प्रस्थानत्रयभाष्यादिग्रन्थकारं नमाम्यहम् ॥ ६ ॥
पद्मपाद्यादिकर्त्तारं पद्मपादं सनन्दनम् ।
वार्त्तिकादिग्रन्थकारं विश्वरूपं सुरेश्वरम् ॥ ७ ॥
पृथ्वीधराह्वयं श्रीमद्धस्तामलकयोगिनम् ।
तोटकंचानन्दगिरिं प्रणमामि जगद्गुरून् ॥ ८ ॥
वादिव्रातगजेन्द्रदुर्मदघटादुर्गर्वसंकर्षणः
श्रीमच्छंकरदेशिकेन्द्रमृगराडायाति सर्वार्थवित् ।
दूरं गच्छत वादिदुःशठगजाः संन्यासदंष्ट्रायुधो
वेदान्तोरुवनाश्रयस्तदपरं द्वैतं वनं भक्षति ॥ (विद्यारण्यस्वामिनाम्).

ஓம்.

# குருபரம்பராஸ்துதி.

சாஸ்த்ரம் சாரீரமீமாம்ஸா தேவஸ்து பரமேச்வர:
ஆசார்யா: சங்கராசார்யா: ஸந்துமே ஜன்மஜன்மநி ||

ஓம் ஸதாசிவஸமாரம்பாம் சங்காசார்யமத்யமாம்
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தே குருபரம்பராம். (1)

சிவம் க்ஞானோபதேஷ்டாரம் விஷ்ணும் தர்மோபதேசகம்
விதிம் வேதப்ரவக்தாரம் குரும் மூர்த்தித்ரயம் பஜே. (2)

வஸிஷ்டம் ப்ரம்ஹவித்ச்ரேஷ்டம் சக்திம் யோகவிதாம் வரம்
பராசரம் புராணஜ்ஞம் ப்ரணதோஸ்மி முனித்ரயம். (3)

வ்யாஸம் வேதாந்தஸூத்ராணாம் வக்தாரம் பாதராயணம்
ஸ்ரீசுகம் ஸூத்ரகாரஞ்ச பஜே வேதாந்ததேசிகௌ. (4)

ஸ்ரீமத் கௌடபதாசார்ய-மத்வைதார்த்தப்ரபோதகம்
கோவிந்தபகவத்பாத-மத்வைதாசார்ய மாச்ரயே. (5)

அத்வைதஸ்தாபனாசார்யம் சங்கரம் லோகஸத்குரும்
ப்ரஸ்தானத்ரயபாஷ்யாதிக்ரந்தகாரம் நமாம்யஹம். (6)

பஞ்சபாத்யாதிகர்த்தாரம் பத்மபாதம் ஸநந்தனம்
வார்த்திகாதிக்ரந்தகாரம் விச்வரூபம் ஸுரேச்வரம். (7)

ப்ரித்வீதராஹ்வயம் ஸ்ரீமத் ஹஸ்தாமலக யோகினம்
தோடகஞ்சானந்தகிரிம் ப்ரணமாமி ஜகத்குரூன். (8)

வாதிவ்ராதகஜேந்த்ர துர்மதகடா துர்கர்வஸங்கர்ஷண:
ஸ்ரீமத்சங்கரதேசிகேந்த்ரம்ரிகராடாயாதி ஸர்வார்த்தவித் |
தூரம் கச்சத வாதிந: சடகஜா: ஸந்யாஸதம்ஷ்ட்ராயுதோ
வேதாந்தோருவனாச்ரயஸ்ததபரம் த்வைதம் வநம் பக்ஷதி ||
(வித்யாரண்யஸ்வாமிகள்).

ஓம்.

# ஸ்ரீ பதரிகாசிரம பஜனை.

---

## காப்பு.

### சந்தவிருத்தம்.

அன்னை தந்தை யாசிரி யனந்தமூர்த்தியானதும்
என்னையென்னுளென்றும்வைத் திருக்குமேற்றமானதும்
பின்னையொன்று முன்னையொன் றிலாதபெற்றியானதும்
என்னதாகுமன்னதே யெனைத்துயிர்க்குங் காப்பதே. (1)

---

## விநாயகஸ்துதி.

### விருத்தம்.

சீரோங்கு மத்துவிதத் தெளிவுரைத்துப்
பக்குவநற் சீவர்க்கென்றுந்
தாரோங்கு புயத்தினராய் தனியிருந்த
சங்கரரைத் தாள்பணிந்தும்
பேரோங்கு நால்வரிடமும் பெயரும்
பெற்றியுடன் பேசுதற்குக்
காரோங்கு கயமுகன்றன் கழலிணையைக்
கனிந்துநிதங் கருத்துள் வைப்பாம். (2)

---

## விநாயகர் ஸ்தோத்திரம்.

### கண்ணிகள்.

(இராகம்—நாட்டை, தாளம்—திரிபுடை.)

ஓம்- அகாரமுதலெழுத்தாய் உகாரமுமானவா
மகாரமதிலிருந்தவா
அன்பின்மிகுந்தவா அருணீர்நிறைந்தவா
அடியாரிடர் மிகக்கடிந்தவா. (ஓம் அா) (3)

ஆனைமுகவனே எங்கோனே யுதவிடவந்தோனே
மிகப்பணிந்தே னையா
அன்பர்க்கேயாளையா ஆக்கிடநாளையா
ஐங்கரமான வழகுக்கையா. (ஓம் அர) (4)

இன்பமளித்தென்றனை யீடேற்றிடும் வஞ்சனை
ஏனோவின்றைக்கிது வீணிந்தனை
என்றுமுகந்தனை யேழைக்கிரங்கினை
ஈசாவுமக்குக் கோடிவந்தனை. (ஓம் அர) (5)

ஈனமுறும்வாழ்வினை யிகழ்ந்தன்பருக்கென்றும்
மோனமுறச் செய்தருள்மூர்த்தியே
நித்யகீர்த்தியே நுத்யநேர்த்தியே
நிச்சலஸாகமீயும் மூர்த்தியே. (ஓம் அர) (6)

உணர்வெனும் பெரும்பதி உதவும்தயாநிதி
உம்பர்களேத்தும் குணநிதி
யுண்டோவேறேகதி அண்டினோமித்ததி
உத்தம சித்ஸாகசேவதி. (ஓம் அர) (7)

ஊக்கமுடனறிவிற் றேக்கும்படியின்றருள்
உய்யும்வகை யீதென்றுறுற்றவர்
உண்மைகற்றவர் மேன்மையுற்றவர்
ஏ உன்னுடைய வருள்பெற்றவர். (ஓம் அர) (8)

என்றுமிருப்பதென்றும் நன்றிதென்றுமேழையேன்
ஏனோமாதர்கள் மையல்மூழ்கினேன்
யிருந்திடவாழ்கிலேன் யிணையடிதாழ்கிலேன்
ஈசாவடிய ரடிவீழ்கிலேன். (ஓம் அர) (9)

ஏதமிகப்புரிவேன் போதமதுவறியேன்
காதகனுகு மூடவரறியேன்
தீதலாதொன்றறியேன் சூதுகளையறிவேன்
பேதமகல வென்றுமீறுவேன். (ஓம் அர) (10)

ஐயனே யென்ன வனியாயமா மிவ்வுலகம்
மெய்யென்றிருக்கும் மனைவாழ்வினில்
மீயாதபோதினில் என்செய்புமேதினி
யென்றுமிருந்து மிகத்தாழ்வினில். (ஓம் அர) (11)

ஒருமொழியாமெனுங் குருமொழியாதென
உற்றுணர்ந்தேனில்லை யோடினேன்
ஓயாதுவாடினேன் உன்னடிதேடினேன்
உதவாதவர்களொடு கூடினேன். (ஓம் அர) (12)

ஓயாவாசையிலென்றும் பேயாயோடித்திரிந்தும்
மாயாகாரியமென வெண்ணிடேன்
வாயாரப்பன்னிடேன் நானுரென்றுன்னிடேன்
தாயாயிருந்தருள் செய்விடேன். (ஓம் அர) (13)

ஔவைக்குபதேசித்த கொவ்வைக்கனிவாயனே
அன்பர்களேத்து மிகத்தூயனே
ஆபத்ஸகாயனே ஆனவர்நேயனே
ஞானமுதவிடு முபாயனே. (ஓம் அர) (14)

அஃதயிதுவென்றெண்ணி யெதுவுமறிந்திடாம
லானேனின்றொடு வெறும்வீணனே
யாங்குடன்தானுமே வேங்கிடன்நானுமே
தீங்ககன்றிட வின்றுவேணுமே. (ஓம் அர) (15)

---

## சுப்பிரமண்யர் தோத்திரம்.

### கலித்துறை.

ஒருபொழுதரிதிரு மருகனரும்பத மொண்கதிர்வேல்
இருவிழிகுளிரவு ளொருவிழிமகிழவு மேற்றிநின்றால்
கருவழியுருவதி லருமையெனருமறை கற்சுவல்லீர்
மருவழியிலையென வொருமொழியாமிதின் மாற்றமின்றே.

வெண்டா.

காலாயுதனே கடைக்கண்பாராய் குகனே
மாலாகினனே வீண் மாதருக்கே—யாளாய்
கோலாகலமாங் குணக்கேடனின்றெனக்குத்
தோலா வேலா நீ துணை.

### கீர்த்தனம்.

பல்லவி.

முருகன்துணை திருமால்மருகன்துணை யிணையிலா
முருகன்துணை திருமால்மருகன்துணை.

அநுபல்லவி.

வேறு நமக்காரு வினைதீரு வழிசெய்வார்(ர)அம் (முரு)

சரணம்.

கருவழியாமதி னுறும்வழியேதெனக்
காட்டி பதம்நீட்டி வினையோட்டி சுகங்கூட்டிடும்திரு (முரு)

கூர்வடிவேலவன் பார்வதிபாலகன்
கோலன் குணசீலன் கருணாளன் யெனையாளும்திரு (முரு)

கன்னியர்கள்மோகமதி லென்னவெகுவாகவிதி
லேனு சுகமோது வெகுதீது வென்றுதரவருள் (முரு)

கந்தாஞான வரவிந்தமருளும்சிவ
மைந்தனெனை வந்தாண் டிடசொந்த முடன்முந்துந்திரு ()

இந்தோடரவணியும் எந்தாயுளம்மகிழுந்
தேசன் வுபதேசன் என்றும் மாகிலாருளவாசன்திரு (முரு)

சங்கையறவேண்டிகுரு பங்கயமேவேண்டியிரு
வோங்கிடவருள் யாங்குடன்கதி தீங்ககன்றிட
வேங்கிடன்றுதி (முரு)

---

## அவையடக்கம்.

### கலித்துறை.

சேற்றிற் பிறந்திடுஞ் செங்கழிநீரது தேசொடுவந்
தாற்றிற் புரண் டழுக்காகினுங் கங்கைநீ ராகுமெனின்
மாற்ற முரைக்க வகையிலையே யிந்த வையகத்தின்
றேர்ச்சியிலாச்சிறியேன் பிழையாமெனிற் றேர்மின்களே.

## ஸத்குருஸ்தோத்திரம்—கீர்த்தனம்.

(இராகம் சங்கராபரணம்—தாளம் அடதாளம்.)

### பல்லவி.

போதவானந்தம் புசிப்பிக்கும் மாதவானந்தம்.

### அநுபல்லவி.

தீதனைத்தும்வாட்டும் திவ்யகுணாகர
வாதனைமாற்றிட வல்லக்ருபாகர (போத)

### சரணம்.

காதலாலிவரைக்கண் டுவந்துநின் றுகொண்டு
ஓதலாலிவர்குறை யென் றுவந்ததென் றுகண்டு
யேதமனைத்துமின் று வெந்ததென் றிரண்டு
பாததூளியின் பஞ்சு பஞ்சு பஞ்சுகண்டு (போத)

தீயவுலகிற்றெரிவைய ரவரேபொருளென
பாபவழியிற்பரிவுட னிதுவேசரியென
மாயவதனின்மறியே உரியக்கரியென
வாயவறிவோர்க் கறிவையறிவதேபொருளென (போத)

காரணகுருவாகி யிங்குவந்துநின் று
பூரணவுருவாகியங்கு மிங்கு மெங்கு
மாரணமறியாம லன் று மின் று மென் றுந்
தோரணையிதுவென் றுகந்து நன்றிதென் று (போத)

சோங்கெனப் பவக்கடல் கடக்குமுனையவெற்பி
தாங்கெவர்க்குறு மிருளொடுற்ற மருளகற்ற
பாங்கெனப்படும் பதமளித்து கதியதற்ற
வேங்கிடன்முடி யடியில்வைத்து முடிவுரைத்த (போத)

---

## பதரீ நாராயண பஜனை கீர்த்தனை.

(இராகம் தேசிகதோடி—ஆதிதாளம்.)

பல்லவி.

ஸ்ரீ நாராயணஜய நாராயணஜய நாராயண பதரீ
நாராயணநர நாராயணபவ கோரார்த்ரி விதாரீ.

அநுபல்லவி.

ஹரித்துவாரம் அண்டின நேரம்
அணுகேனென வகன்றதுபவபாரம்
சரியிது மாயாபுரியெனப் பேரும்
குறியறிவாய் பிர்ம்மகுண்டமி தாகும் (நாரா)

சரணங்கள்.

குசாவர்த்தம் ஸ்ரீவில்லிகேஸ்வரம்
நிசாமயறியது நீலபர்வதம்
வசமாயுற்றிடு வார்களென்னேரமும்
வானப்பிரஸ்தருக் கனுகூலம் (நாரா)

தனதானிய முதலுதவிடுங் கன்கல்
தக்ஷேஸ்வரம் ஸ்ரீ கங்காதீரம்
கனமிகும்ஹரிஹர வபேதமுற்றிடும்
கண்ணியருக்கிது வாதாரம் (நாரா)

சத்யநாராயணம் ரிஷிகேஸம்
சுத்தஇதய விருடிகள்வாஸம்
எத்திசைகளும்புக முற்றிடுமத்துவித
உத்தமர்களுக்கிது வெகுநேசம் (நாரா)

எண்டிசைகளும் புகழ்தண்டிகளும்
பரமஹம்ஸர்களும் இதில் ஸன்யாஸம்
கொண்டவர்களை யெண வண்டிடாது கோ-
தண்டபாணி தப விஸ்ரவாஸம் (நாரா)

தபோவனமிது லக்ஷ்மணஜ்வாலா
தாட்டிகதுருவன் தபமிகுமாலாய்
சுபோதமிகவுரும் சொர்க்கவாச்ரமம்
சொல்வாயேவழி பதரிகாச்ரமம் (நாரா)

பிரம்மபுரி சிவபுரி விஷ்ணுபுரி
பேர்மிகும் வியாஸ ராச்ரமம்
கருமமுடன் பக்தியோக மாவதில்
காணும்முத்தியோ வெகு ச்ரமம் (நாரா)

தேவபிரயாகா உத்தரகாசி
திகழுறு முக்தம கங்கோற்பத்தி-
மே வருஞான முடன்பழகிடிலது-
வே வருமானந்த வுற்பத்தி (நாரா)

விர்த்தகேதாரம் த்ரியுகநாராயணம்
வேண்டினதுதவும் ஸ்ரீ கேதாரம்.
நிருத்தமிடுங் கன-கேசனிருப்பிடம்
நீக்கமிலாதெனக் காதாரம் (நாரா)

எண்ணிலாதசுகம் நந்தப்ரயாகா
கண்ணுவரிஷியாசிரம மிந்தஜாகா
திண்ணமுடனிது விஷ்ணுப்ரயாகா
கண்ணியமிகு மனு மான்சட்டிவாகா (நாரா)

பதரிகாச்ரமம் ஸ்ரீவிசாலா
உற்றிட வேங்கிடனுளம் குசாலா
எத்தலத்தினு மருளிடவும்விசாலா
ஏற்றிடுவோர் பவப்பிணிதீர்க்கும்சாலா (நாரா)

## ஓரடி கீர்த்தனம்.

(இராகம் கமாஸ்—ஆதி தாளம்.)

பல்லவி.

ஸ்ரீ பதரிநாராயணனைப் பாடும் நம்—
பாபமென்ப தின்றே பறந்தோடும் சுகந்தேடும் கூடும்.

அநுபல்லவி.

இத்தரையினில் மானிடராய்ப்பிறந்திருந்தும்
ஏனோ வின்னமுமிது தானோ நன்மைபொருந்தும் (ஸ்ரீபதரி)

சரணம்.

தூலசூக்கும வதிசூக்கும சுத்தம்
நாலுபதவி யுதவிடுமிந்த க்ஷேத்ரம்
கேளாய் நந்த ப்ரயாகையி லிருந்து
வாலாய கருடகங்கையிற் பொருந்தும்
தூலமே மேலாய கங்கையே யாதியாக
பாலாழியான பிரயாகைபரியந்தம் சூக்குமம்
வபார சரஸ்வதி கங்கை சேரிடமதிசூக்குமம்
குபேரசிலாவிலிருந்து கைலாயம் வரைசுத்தம்
சொன்னவிதி லடுத்துன்னதமேபல
நன்னய வேங்கட னின்னமுமேசொல
மிகுமா ஜகமே வெகு ஜாலமுமே
நிலமே ஜலமே அனல்வா நிலமே
தன தானியமே தலமே கிலமே
இனமே குணமே தினமே மனமே (ஸ்ரீபதரி)

---

## கண்ணிகள்.

(இராகம் நாதநாமக்ரியா—ஆதிதாளம்.)

ஸ்ரீபதரி நாராயணனேபிரம்மம்—வீணாய்
பற்றிடாதே மனக்கர்மம்—இதை
யுற்றவர்க்கே வெகுதர்மம்—வெகு
கற்றவமா்மிது மர்மம் (ஸ்ரீபதரி)

பதரி காச்ரமத்தின் பலமே—மதி
பற்றினாலன்றோ மிகநலமே—அன்று
உத்தவருக்கு கிருஷ்ணருமே—உபதே
சித்தடைந்தார் நல்வரமே (ஸ்ரீபதரி)

உலகில் உத்தம மொன்றேநாடும்—திமிர்
சலதியற்றவ மின்றேயோடும்—வீண்
பலதிசை களிலேன்பாடும்—இந்த
தலமிசை மனம்வரிலோடும் (ஸ்ரீபதரி)

அலகானந்த நதிதீரம்—வசு
தாராவென்று மதில்சேரும்—என்றும்
நிலையாம் பிரம்ம கபாலம்—என்றும்
நேரா திதுபோற்காலம் (ஸ்ரீபதரி)

நாராயணனே நம்தெய்வம்—இதை
யாராயொணு தவர்க்கென்செய்வம்—என்றும்
சீரா யெவர்க்கும்செவிப்பெய்வம்—சும்மா
நேரா தெவர்க்குமிந்ததெய்வம் (ஸ்ரீபதரி)

ரகுநந்தன னுரை யோர்ந்து—இது
வெகுசுந்தரமெனத் தேர்ந்து—சுயம்
பிரபையடைந்தசுகம் நேர்ந்து—நமக்கு
கிருபையும்வந்தது சேர்ந்து (ஸ்ரீபதரி)

கோதகற்றிடுமிந்த க்ஷேத்திரம்—எந்த
மாதலத்தினுமிது நேத்திரம்—வேங்கடன்
தீதகற்றிடமிகு காத்திரம்—வகித்த
மாதவத்தடிகள் சற் பாத்திரம் (ஸ்ரீபதரி)

## காவடிச்சிந்து—மெட்டு.

ஸ்ரீபதரி நாராயணனைத் தொண்டு—புரி
உத்தமர்க் கென்றுஞ் சுகமுண்டு
சித்தமதனிற் பரி சுத்தமுடனறிவைக்
கொண்டு—மன மண்டு

சீரில் மிகுந்திடும் நற்தேசம்—திருக்
கேரளத்தில் யிரந்துவாசம்—நம்
பூரியெனுமறையோர் ஆர்வமுடன் நற்றவ
பூசை—என்று மாசை

உம்பர்களேற்றிடுவா ரின்றும்—வெகு
வம்பலர் சாற்றி மிகநன்று—
இம்பர்கள் தோற்ற வருடங்களினேற்ற
மிகு மாதி யினிற்—சோதி

உத்தராயணத் தினிற்பின்பாதி—வருந்
தக்ஷணாயனத்தினில்—முன்பாதி
யூற்றதில் மானுடபூசை மற்றதிலமரர் பூசை
யாகும்—பவமேகும்

கணபதி யுத்தவ குபேர—ருடன்
குணமிகு—லக்ஷ்மி ஸமேதன்
பணிபதிமேற் றுயிலும் நர நாராயணன் நார
தருடன்—இதிற்கருடன்

வாசமாயிருக்கு மிந்த மூர்த்திகளைப்
பூசனைசெய்வோ ரடைவர்கீர்த்தி
நேசமுற்றிருந்தமன மாசகற்றறிந்தறிவாய்
நில்லு—வினை வெல்லு

சுத்தநிர்விஷய சிற்சொரூபம் என்னும்
அத்வைத மடைவ—தபரூபம்
மற்றிலைமாதவானந்தர் சொற்படி வேங்கிடன் சேரும்
வாரும்—எல்லோரும்.

---

## கீர்த்தனை.

(இராகம்—காம்போதி, ஆதி—தாளம்.)

### பல்லவி.

பரமானந்த சுகத்தைக் கூடு—ஸ்ரீ
பதரி நாராயணனைத் தேடு ஓடு—நாடு (பர)

### அநுபல்லவி.

தரமிகு முலகினில்—தாழ்ந்திடும் பாபம்
கிரதிசயானந்தம்—நீங்கிடாதோங்கும் (பர)

### சரணங்கள்.

தோடக ராச்ரமம்—ஜோதிர்மடமெனத்
தோன்றிடுமே யதி—லேதவமிகுங்கன
பீடமுறும் ஸ்ரீ—சங்கராச்சாரிய
ரீடவெவருமிலை—யேயெனச்சீறிய (பர)

பதரீகாச்ரமத்தை—யுற்றிடும் போதினில்
சித்தம்விழுங்குண—முற்றிடும் பாரினில்
உத்தமமிகுமா—வத்துவி தத்தலம்
சுத்தஹிருதயவழி—வுற்றதுவே பலம் (பர)

நாராயணநமசி—வாய வென்றிடும்
பாராயணம்எமவு—பாயம் வென்றிடும்
ஓராயெனும்பத்ரி—காச்ரம மொன்றிடும்
ஓராயணமவி—ரொளியினைக் கண்டிடும் (பர)

சித்திரையெனுமா—திங்களிலே நரும்
பத்தரைமாத்துத்—தங்கமதா யுறும்
முத்தரடைந்திடு—துங்கமதா யொளி
யித்தரையிற்றிரு—வேங்கிடனும் புகழ் (பர)

## கேதாரேசுவரர் கீர்த்தனை.

(இராகம் முகாரி—தாளம் திரிபுடை.)

### பல்லவி.

கேதாரேச்வரா ஆதாரமுனையலா தாரினிநாதா (கேதா)

### அநுபல்லவி.

வேதாவே யெனை யேனுர் சொற்படி
நீதா னுக்கினை யேனே யிப்படி
வினைப்பகுதி யென்றிடவும் மிக
வுனைப்பணிதல் நன்றெனவும் பிற
வினையேதோ மனமதி லுற்றது
மனமோதான் அறிவினை யற்றது (கேதா.)

### சரணங்கள்.

போதாதென்மதி சாதாசற்குரு
பாதாரமணுகிலாதா நாயினேன்
நாதாதீத சுபோதா ஞானப்ரக்யாதா வென்றுனை
மேதாவிகள் சொல
தனுகரணாதி புவ்னபோகங்களி
லெனது மனதுமலாவும்
தனதிதுவெது வன்னியமாவது
வென வறிவது இன்றியமையாதது (கேதா)

கேதாரனதடி படியார்கள்—பதரீ
நாராயணனுள மெரிவார்கள்—சிதரீ
நாராயணனடி படியாதவர்கள்—ஸ்ரீ
கேதாரகனுள மெரிவார்களீ—தரி
ஹரி ஹர னெனுமபேத—மற்றவர்
எரிநரகெனுமொழி—யெழாமலுற்றவர்
எனமறையினும்—விடாதுரைத்திடு
மனவரதமகலா துளத்துரும் (கேதா).

கெங்கா தரசிவ சம்போ சங்கரா
பங்காயுமை யகளங்க பவஹர
துங்காஜயசுப ஜகத பயங்கர
இங்காதரவொடு வந்தாள் ஹரஹர
எங்காகிலும்விடய சுகங்களி தந்தா னுதவிடவலதோவிதி
லுங்காதலுமோங்கிட வேங்கிடனிங்காதர வேண்டிட
வாண்டிடும் (கேதா)

---

## ஸ்ரீ சங்கராச்சாரியார் பஞ்சரத்தினம்.

மங்களஞ்சேர் வைபவங்களுடனத்துவித
மார்க்கமே மார்க்கமெனவும்
மாபூதலத்திலுறு மாணவமதத்தினர்கள்
மதிகொண்டு கதியடையவும்
வங்களஞ் சீனமுடனெங்கணும் நின்மகிமை
மாட்சியொடு காட்சியுறவும்
வானவர்க ளானவர்கள் வந்தனத்துடன்வெகு
சுதந்தரத் துட னுலவவும்
கங்காள னின்று பவபங்காளனாய்வந்த
கண்யனே வெகுபுண்யனே
காரிருளகற்றியென் றீவினையையெற்றி நின்
கருணைக்கிலக் காக்குவாய்
கங்காளருக்குதவு பங்கயத்தாளனே
சதுர்மறைகளாய் சீலனே
கங்கையொடு திங்கள்பணி கொன்றையொடு
தும்பையணி சங்கரகுருத் தெய்வமே (1)

சீர்மல்கு ஸ்ரீசங்கராச்சார்ய நின்னடி
தினந்துதித்திட வறிகிலேன்
செப்பறிய உத்தமர்கள் பக்கலிற்சென்றவர்
திருத்தொண்டுபுரிய வறியேன்

பேர்மல்குமாணவப் பேயதுபிடித்திடப்
பெரிய வானரமாகினேன்
பேத்தமொடுமுத்தியது வெத்தகையதென் றுணர
பெரியவர்களைத் தெரிகிலேன்
சீர்மல்குபுவியிடை நினைத்தவிர வேறொரு
வரைத்தெரிந்திட வறிகிலேன்
நித்தனே வமரர்தொழுகர்த்தனே வடியவர்க
ளேத்தவரமருள் முத்தனே
கார்மல்குசோலைசெறி கேரளத்துறை மறை.
யவர்க்கொரு சுதச்செல்வமே
கங்கையொடு திங்கள்பணிகொன்றையொடு
தும்பையணி சங்கரகுருத்தெய்வமே (2)

ஆனதொருதாயினுட னற்றில்நீராட முத
லைக்கருள் சுரக்கவிலையோ
அன்று தவமுனிவரர்களஞ்சவரும் நருமதையி
னற்றலை யடக்கவிலையோ
மோனமுறு கோவிந்த பாதருக்காகவெயில்
முற்றினுமக ற்றவிலையோ
முத்தியு தவுங்காசி யுற்றுவருமுத்தமர்க்
குத்தரமுரைக்க விலையோ
நானெனுமகந்தையருமாமென வுகந்துவரும்
நாயினேற் கொன்றுமிலையோ
நண்ணிலேனடியவர்க ளடிபரவ வெண்ணிலேன்
நம்பியின் றனையடைந்தேன்
கானவர்வலைப்படும் மானெனவதைப்படுங்
காலமெனை வந்தாளுவாய்
கங்கையொடு திங்கள்பணி கொன்றையொடு
தும்பையணி சங்கரகுருத்தெய்வமே (3)

அபலறிவ தறிவதல அரியறிவ தறிவதெனு
மாப்தமொழி யொன்றுகண்டால்
அய்ய வென்பரிதாப மாச்சரிய மாச்சரிய
மனியாய மென்சொல்லுவேன்
மயலறிவதல்லாது மதியறிவதில்லாது
மருள்கொண்டுழன்று நின்றேன்
மங்கையர்களிங்கித மொழிக்கிரங்குவதலது
மற்றுமொருவழி யறிகிலேன்
நயமோடிருந்துகுரு சொலுமொழியறிந்துதிரு
நளினமலர் பற்றநினையேன்
நாதா அதீதனே வேதாந்தபோதனே
நண்ணியின்றுனை யடைந்தேன்
கயவுரிதரித்து திரிநயனமொ டெருத்தில்வரு
கடவுளே தவிரிடர்களே
கங்கையொடு திங்கள்பணி கொன்றையொடு
தும்பையணி சங்கரகுருத்தெய்வமே (4)

காதலொடுவெத்துவித மோதவுங் கருமங்கள்
காணு தகன்றோடவும்
கற்றவர்கள் நற்றவர்களெப்பொழுதுமற்புத
மெனப்பதும முற்றுவரவும்
போதவானந்தமருள் மாதவானந்தகுரு
பொன்னடி தனைப்பணியவும்
புத்தியுடனித்தமு மவர்க்கேவல் பக்தியொடு
புரியவுமும்மல மெரியவும்
வேதமுடனுகம புராணமிதி காசமுனை
வித்தையுறமா அவித்தை
விட்டுபாகதிகிட்டு முத்தமவழியொட்டு
விதமருளி யனுதினமுமென்

தீதகற்றிடவுமென்னை யாதரித்திடவுமுன்
திருவருட் கண்ணைக் கிடாய்
திங்களொடு கங்கைபணி கொன்றையொடு
தும்பையணி சங்கரகுருத்தெய்வமே (5)

---

நாமாவளி.

ஸ்ரீசங்கர பகவத் பாதாசாரியர் திருவடிளே சரணம்
ஸ்ரீமத் தோடகாசாரியரவர்கள் திருவடிகளே சரணம்
ஸ்ரீமத் ஹஸ்தாமலகாசாரியர் திருவடிகளே சரணம்
ஸ்ரீமத் ஸுரேச்வராசாரியரவர்கள் திருவடிகளே சரணம்
ஸ்ரீமத் பத்மபாதாசாரியர் திருவடிகளே சரணம்
ஸ்ரீசங்கர பகவத் பாதாசாரியர் திருவடிகளே சரணம்
சிவ சிவ சங்கர சம்போ சங்கர ஹர
ஹரோ ஹர ஹர ஹரோ ஹர ஹர
நமப்பார்வதீ பதையே ஹரஹர மஹா தேவ

---

## ஸ்ரீ ஜகத்குரு ஆதி சங்கராசார்ய ஸ்வாமிகளின் திருவிளையாடற்றோத்திரக் கீர்த்தனைகள்.

(இராகம் தோடி.—தாளம் ஆதி.)

ஓரடிக் கீர்த்தனை.

பல்லவி.

ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்—திவ்ய
திருவடிசரணம்-சிறியன்முடிக் காபரணம் (ஸ்ரீசங்கர)

அநுபல்லவி.

கங்காதரம் பார்வதிநாதம் மங்களாகரம்
திங்களணிந்திடும் (ஸ்ரீசங்கர)

சரணங்கள்

அம்மையப்ப னின்னருள்பெற ஜீவர்கள்
செம்மை யெப்படி செயுமென தேவர்கள்
வறுமை மிகவுரைத்து அறுமுகனையழைத்து
தரணியினி லுதித்து பெருமை மிகவுரைத்து
பட்டபாதராய் சிட்டரோடு நீ
துட்டபாதக புத்தரானவரை
விதண்டஞ்செய் கருமகண்டஞ் செய்யென
விதித்தவரை புவி மதிக்கவரவிடும் (ஸ்ரீசங்கர)

எம்மை யாட்கொளவுஞ் சுகப்பேருள
தம்மை காட்டிடவுங் கனப்பாருள
இம்மையாவுந் தரு மெழில் மிகுஞ்சீருள
செம்மையாம் நாகஞ் செறிந்திடுங்கேரள (ஸ்ரீசங்கர)

இடபாசலத்தினி லிலங்கிடும் பூரண
தடமாகிய நதிக் கரையினிற் காரண
திடமாகிய சிவகுரு"மனையாரிய
ளிடமாகவே ஜகத்குரு வெனச்சீரிய (ஸ்ரீசங்கர)

ஒருகாலட்டியிலுதித் திருகாலென்முடியில்வைத்
துருகாதசிலையென பெருகாதலுளமன
மொத்து விடயசுகங்களினு–மெத்து சமய மதங்களினு
முத்தம மிதுவென வனுதின–மத்து விதமருள்செயுங் குண
ஒத்து விடயங்களினும்–எத்து சமயங்களினும் [கன ()
உத்தமம் அத்துவிதமென் றொத்திட வேங்கிடன் மனம் ()

---

இங்கிலீஷ் நோட்டு.

ஸ்ரீ சிவகுருசுதச் செல்வமே—யென்றன்
பவமறுத் தருள்வாய்
ஸ்ரீ ஜகத்குருவெனச் செப்பிடுமற்புத
மொப் பொருவர்க்கிலாத் தற்பரப்பொருளாகும் (ஸ்ரீ)

ஆயிரம்வேதியர் சந்தர்ப்பனைகளி லகப்படாத பாலா
வாயுவினுற்சுழல் வந்துவந்தரமதாகிய திரி சூலா
அட்டதிக்கிலு மெட்டுசெங்கராராகவே வரு மூலா
முட்டவெங்கணும் மட்டிடாதசின் முத்திரையாங் கோலா

சின்முத்திரையாங் கோலா
எத்திசை புகழ் சீலா
அத்வைத அனு கூலா
அனுகூலா அனுகூலா அனுகூலா (ஸ்ரீசிவ)

இடபாசலேசரேழா முற்சவ மிரதமன்று தினமே
ஏற்றிடுமூர்த்தியுந் தோற்றிலரா யங்கிருந்த வதி சயமே
அரிதரிதெங்கணுஞ் சிறுசிறுசங்கர ரருளினுந்தோற் றலுமே
அங்குஞ்சங்கர ரிங்குஞ்சங்கர ரெங்குமாக் கலுமே

எங்கு மாக் கலுமே —ஜெய
துங்கம் நோக்கலுமே —பவ
சங்கடம் போக் கலுமே
போக்கலுமே போக்கலுமே போக்கலுமே (ஸ்ரீசிவ)

உபமன்னியுமுதல் ததீசி கௌதமர் உத்தம வகஸ் தியரும்
சுபமதுமிகவுரு முபதேசங்களுஞ் சூழ்ச்சி ரக சியமும்
மந்திரலய ஹடராஜயோக சிவமான்மியமுந் தவமுந்
தந்திரமும் பிரமந்திரமும் உளதத்துவ வா தனையும்

தத்துவ வாதனையும்
மற்றுள சாதனையும்
நற்றவ போதனையும்
போதனையும் போதனையும் போதனையும் (ஸ்ரீசிவ)

அன்னையோடுநீர் சின்னமதலையா யாற்றினில் மூழ் கிடவும்
பின்னமதாயொரு வன்னமாமுதலை பற்றிட மாழ் கிடவும்
என்னசெய்குவா யன்னையே யினி சந்நியாச முதவும்
சின்னவனே பசும்பொன்னவனே என நன்னயவேங்கிடனும்

நன்னய　வேங்கிடனும்　—உனை
முன்னவ　னேயெனவும்　—சரி
அன்னையின்　சம்மதமும்
சம்மதமும்　சம்மதமும்　சம்மதமும்　(ஸ்ரீசிவ)

---

(இராகம் சங்கராபரணம்—அடதாளம்.)

பல்லவி.

நியாய மாகுமா ஸ்ரீ சங்கரா நியாய மாகுமா:

அநுபல்லவி.

அநியாயமாயெனை யாண்டிடாமலேயிருப்பது　(நியாய)

சரணங்கள்.

தர்மமா வித் தரணியிற்　பட்டு
கர்மமா நற் கதியினை　விட்டு
வர்மமா பொல்லா வாழ்வினிற்　பட்டு
மர்மமா விம் மாயையில்　விட்டு

சத்துவக்　குணக்கடற்　கரையே
சார்ந்தவர்க்　கிரங்கிடும்　துரையே
சுத்தவத்　துவிதத்　திரையே
தூயம　னத்தவர்க்　கரையே　(நியாய)

நருமதாநதிக் கரையிற்　சென்று
நிருமிதாசன நிலையீ　தென்று
குருவிவரென கோவிந்தரைக்　கண்டு
திருவடிவந்தனம் புரிந்தா　யன்று

யாவரென　வவர்　வினவ
விவேகிகளு　மறிய　வொணு
தாகுமது　வெது　வெனில்
சிவோக　மென　வருளியவா　(நியாய)

நருமதை யொரு காற்ற தும்ப
வருமதை யுணர்ந்தவர் வெ தும்ப
அரகரசிவ வென வொ துங்க
வரநதி கமண்டலம் பதுங்க

வாக்கிய வன்புள பரனே
யோக்கிய முற வேங்கிடனே
பாக்கிய மருள் தர்ப்பரனே
பாப திமிர பாஸ்கரனே (ஸியாய)

---

## காவடிச்சிந்து.

---

ஸ்ரீ—சங்கரகு ருவே யுங்கள் பங்கமிலா ருளா லெங்கள்
சங்கடம னைத்தும் பரந் தோடுமே—விட
யங்களும றுத்து சுகந் தேடுமே
ஸாதுசேவை யெப் போதுமாமருள்
தீதுசெய்திட லேது நீரருள்
தஞ்சமென வின்றடைந்து கெஞ்சினோம்—பவ
மிஞ்சிவரு மென்று மன மஞ்சினோம் (1)

உச்சியாமொ ருபொழுதில் மெச்சியேகு ருவெயிலி
லுலர்ந்திடம னம் பொறுது கண்டவா—வவர்க்
கந்தரம தாக நிழல் கொண்டவா
வீசியே துயி லேசமே வெயில்
வாசிலாம லு லாசமாய்வர
விச்சையாய் கு ருபணிகள் செய்தவா—வெகு
லச்சையா மி ருவினைகள் கொய்தவா (2)

கோதிலாதி ருந்துகுரு பாதுகைபு னைந்துதிருப்
புண்ணியந திவிளங்கும் காசியே யதி

லெண்ணிலாத வர்கள் விசு வாசியே
விந்துமாதவர் வந்துசொப்பனந்
தந்துகாலையில் நந்தனன் எனும்
மைந்தநர ஸிங்க மூர்த்தி சொற்படி—வந்த
டைந்தனன் சு பமிகுங் கா சிப்பதி (3)

சீர்பெருங்கங்கைநீராடி பேர்பெருமங் களம்பாடி
சிட்டரோடு மட்டிலாத வீதியில்—வர
கெட்டவனு கும் புலையன் சாதியில்—விசு
வேசரே யொரு நீசனுய்வர
பாசமோ டிது மோசமோவழி
விட்டுவில கென்று மொழி கொள்ளவும்—அவர்
கெட்ட தெதுவென்று பதில் விள்ளவும் (4)

எள்ளளவுங் கள்ளமிலே யுள்ளபடி நல்லவரா
மென்றவ ரு டனுரைக ளாடியே—யாமு
மொன்றென ம றைகள் சில பாடியே
பதரிகாச்சிரம மதனிலே சில
பிரம்மசூத்திர வுரைகளே சொல
பக்குவ ஹரி ஹர வபேதமுஞ்—சில
முக்கிய வு பநிஷத்து கீதமும் (5)

காசியினி லத்துவித வாசியா யிருந்து—வேத
வ்யாஸரிவ ரென்று மறி யாமலே—யவர்
பாஷியத்தின் சங்கைதெரி யாமலே—யுரை
கட்டமோவென வெட்டுநாள் சொல
பட்டபாடென வொட்டுமோ சொலக்
கண்டனர் ப தும பாத ருண்மையை—சொல
விண்டனர் வி யாசரெனும் வண்மையை (6)

வேகமுட னேகும் பிர யாகையாம்ந திக்கரை லோ
காயதப வுத்தர் முத லானவர்—மத

மோகமதா லுற்ற சில வாதியர்—உடன்
பட்டபாதரும் துட்டரோடுள
வுற்றதால்வருங் குற்றமீளவே
பற்றிடுந் து ஷாக்கினியில்க வந்திட—வவர்க்
குற்றவு பாயங்கள் சொல வந்திட (7)

மண்டனமி சிரரெனும் பண்டிதரு டன்வாதாடி
வென்றிட வெ குண்டெழுந்த காலையே வாதம்
தகன்றிடவ னைந்தீர் வெற்றி மாலையே—யங்கு
காதலாலெழு சாரதாவுனை
வாதமேயொரு மாதகாலமே
பாங்குடன் வா தாடக்கொண்டாய் வெற்றியே திரு
வேங்கிட னருள்பெற சீர்முற்றியே. (8)

(ஸ்ரீ—சங்கரகுருவேயுங்கள்)

---

## கீர்த்தனை.

(இராகம் காம்போதி—அடதாளம்.)

பல்லவி.

ஸ்ரீ சங்கரா இன்னுந்தயவில்லையா சங்கரா
இன்னுந்தயவில்லையா.

அநுபல்லவி.

இளகுமனமில்லையா விதைச்சொல்லையர் (இன்)

சரணங்கள்.

உக்கிர வைரவனென்றொரு பாவி
யக்கரையாய்வந்து பக்கலில் மேவி
முக்கியமாய் சிரமுதவிடுந் தாவி
பக்குவமாமெனப் பதரிட வாவி

யுற்றிடு முடல னித்தியமென
வுதவியவா நித்தியமென
வத்துவிதம் சத்தியமென
வருளிடவினி யென் மருள்கெட (இன்)

எண்ணிடுங் கோகரணஞ் சென்று
நண்ணிடும் நீலகண்டரை வென்று
புண்ணியமாம் வல்லிபுரத்தில் நன்று
கெண்ணியவான் மகன் கெடுவா னென்று
சடமே நீ யேனோவென்
னிடமே நிற் பதுதானென்
சடமுமலேன் சடமுமென்முன்
னடைபெறுமென வருளியவா (இன்)

துங்கபத்ரா நதிக்கரையிற் சென்று
வங்கோ ராலய மறைக்க நன்று
புங்கமிகுஞ் சுரேஸ்வரருக் கென்று
மங்கள சாரதா மடத்திலொன்று
தானந்த மில்லாததான
வானந்த கிரியார்மோன
சாந்தரென வாண்டிடுகுரு
பாந்தமெனை மீண்டிடவருள் (இன்)

புகழ்பெருங் காஸ்மீர தேசம்
மகிழ்வுரும் ஸ்ரீ நகர வாசம்
ஜெகத்குரு வுமக்கிது விலாசம்
பகவானே தெரியாது பரியாசம்
தேவரிஷிகளா லமைத்த
பீடம் நான்கு வாயிலுற்ற
தெற்குவாய் கபாட மற்றிட
வுற்றவா வென் றீதகற்றிட (இன்)

தத்தாத்ரேயர் குகையி விருந்து
வுத்தம சிவயோகம் புரிந்து
பத்தர்க்கெவை யாவும் பரிந்து
அத்துவிதத் தருள் கலந்து
அந்தர துந்துபி முழங்க
மந்தாரமலர்களும் மழங்க
ரிஷபாரூடராய் வந்திட
சீஷன் வேங்கடன் பாடிட (இன்)

## சமரஸ நாமாவளி கீர்த்தனை.

பல்லவி.

ஹரி சிவ ராமலிங்க கோவிந்தா ஹர (ஹரி)

அநுபல்லவி·

திரிபுரமெரிசெய்த முரஹரிமுகுந்தா (ஹரி)

சரணங்கள்.

ஐங்கரா கோவிந்தா ஐமுக நாரணா
பங்கமிலாமலென்றும் பரமாய் நிறைந்தசிவ (ஹரி)

சங்கு சக்கிரகையா கங்காதரா—பசும்
பொங்கரவங்கள் புனைந்த கோவிந்தா (ஹரி)

கரியதைக் காத்திட்ட திரிநேத்ரா
நரியைப்பரியாய்ச்செய்த கோவிந்தா (ஹரி)

கரியுரிதரித்திட்ட கோவிந்தா—வாய
ருரிதயிருந்திட்ட கங்காதரா (ஹரி)

காளிங்க மர்த்தனா கங்காதரா—வன்று
காளிமுன் நிர்த்தனா கோவிந்தா (ஹரி)

கன்றால் விளாவெறிந்த கங்காதரா—பெருங்
குன்றால் புரங்கடிந்த கோவிந்தா (ஹரி)

ஸமரஸப்பாட்டும் ஜனங்களைவாட்டும்
யமபயமோட்டும் இன்பமேகூட்டும் (ஹரி)

---

## கருங்குழி ஒங்காரமடம்
## ஸ்ரீ ஜகத்குரு ஆதிசங்கர ஆசாரிய சுவாமிகள் தோத்திரம்.

---

(இராகம் காம்போதி—ஆதி தாளம்.)

பல்லவி.

ஸ்ரீ—சங்கராசாரியா ரடிபணி மனமே
நீங்காத வருள்பெறுவாய் அநுதினமே (ஸ்ரீசங்)

அநுபல்லவி.

பூங்காவுசெறி கருங்குழிசையெனும்பதி
ஓங்காரமடத் துறையுங் கருணாநிதி (ஸ்ரீசங்)

சரணங்கள்.

வஞ்சியர்களை யடுத்து—மதம்
மிஞ்சி பஞ்சணை வருத்து
பஞ்சுப் பதம் படித்து
உஞ்சும்வழிவிடுத்துத் துஞ்சிடலதுகெடுத்து (ஸ்ரீசங்)

தீர்க்க ஸ்வப்பனமலவோ என்றுமுலக
தீர்வையான தல்லவோ
பார்க்குளிதையுணராப் பாமரனெனவிருந்
தார்க்குமசடனென லாகா தத்விதகன (ஸ்ரீசங்)

பஞ்சபூதமலவோ எதிலுமிது
கொஞ்சகால மலவோ
தஞ்சமெனலேகுரு பங்கஜமேயடைந்து
மங்களம்பெருவாய் ஹிதம்பலவுறுவாய் (ஸ்ரீசங்)

வீணுக்கலைந்திடாமல் என்றும்
வீம்பிலிருந்திடாமல்
ஜாண்வயிறு வளர்க்கச் சாந்தமதை மறுக்க
காண்பொருளைவெறுக்கக் காரணமென்னவிருக்கோ (ஸ்ரீசங்)

அய மாத்மம் பிர்மம் என்றுஞ்சுகம்
செஞ்சுருதி மர்மம்
கயவுரிதரித் தடியவர் பயமறுத்திடும்
சுயம்சொரூபசிவ மயமதாகும்சுப (ஸ்ரீசங்)

பாங்கான உமைபாகன் என்றும்
பக்தரிடத்தில் வெகு மோகன்
ஓங்கிடவுலகினில் உத்தமகுருவென
வேங்கிடனுக் கருளும் விமலபோதகன (ஸ்ரீசங்)

---

## இதுவுமதுவே.

### பல்லவி.

ஸ்ரீ ஜகத்குரு சங்கர ரடிபணிவாய்—ஓமனமே (ஸ்ரீஜக)

### அநுபல்லவி.

பணிவாய் பாபம்தணிவாய் கனிவாய் மனமே துணிவாய் (ஸ்ரீ)

### சரணங்கள்.

சீர்மிகுங் கருங்குழியெனுமாநகரம் அதிற்
சிறந்திடும் மாதவானந்தரிடம்
பேர்மிகும் ஸ்ரீமத் ஓங்காரமடம் அதையடைந்திருந்திட
பெத்தமகன்றறி வுற்றிடுவாய் திடம்
இனத்தவரு மாஜனத்தொகையிலே
னெனைத்துணையோடே வினைத்தனைதொடர்பின்ல்
விடுத்ததுபோதா தடுத்ததுவிலா
கெடுத்திடுவதா லுனக்கிதுவெலா

மெனத்தருமெனு நினைத்தனைகொலோ
வெனக்கெதுவதே உனக்குருமாலா
வேது வேறு உனக்கோது பாரு வெகு
சூது சூதுயிந்த வேதைதீருவென
வோது வோது யிட்டரேதுயேது பசும்
போதலாது நமக் கியாது யாதமிலோம்
திடமுட நடனமிடுங் கலாபம
தெனவரு மகளிரிடும்பையால் வரும்
தீதகன்றறிவதா முனைப்பாரு
ஏதிருந்ததது வேங்கிடன் கூறு. (ஸ்ரீஜக)

---

## கீர்த்தனை.

(இராகம் மத்தியமாவதி—தாளம் ஆதி.)

### பல்லவி.

பீமா மிகுநேமா ஜயபீமா மிகுநேமா

### அநுபல்லவி.

ஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சாரியா
யெனக்கருள் பதவனஜமாரியா (பீமா)

### சரணங்கள்.

கைப்பள்ளி யில்லத்தி லுண்ணி நம் பூதிரி
பொய்ப்பள்ளி யாமெனை யெண்ணி யிங் காதரி
பைப்பில்படிக்குமிங் தப் பாரிற் பாதிரி
கைப்பிடி விடுத்தெனைக் கார்த்திடு மதகரி (பீமா)

பண்டைக்கால பவுத்தராதிய
மிண்டர்களையடக்கும் நிமித்தம்போதிய
தண்டஞ்செய்த தாட்டிகனே துவித
கண்டனம்செய் கர்த்தனே அத்துவித (பீமா)

மூவாசையதில் மூழ்கிடுமிவ்வுல
காபாசநெறி யாக்கிடாத பல
மேவாதிருந்தறி வோங்கிடச்செய்யும் பல
தேவாதிகள் தொழு தேற்றிடும்புஜபல (பீமா)

பெண்டுபிள்ளைகளில் கண்டிருந்தசுகம்
யெண்டிசைகளறியவிண்டேன் அதுவசுகம்
கண்டிருந்துமுணரா திருவேங்கிட
னண்டிவந்தவெனையாள் மதனாந்தக. (பீமா)

---

## கீர்த்தனை.

(இராகம் தோடி—அடதாளம்.)

### பல்லவி.

சங்கராம்ருதம் பருகிடசாயுஜ்யம்
பெறலாம் சுகிர்தம் (சங்)

### அநுபல்லவி.

துங்கமிகும் வேதாந்த நவநீதம்
தூய்மையுடையோர்க் குகந்திடும் தற்போதம் (சங்)

### சரணங்கள்.

ஜெனன மகலமாற்று மமிர்தம்
தீயமனதைப் போக்கு மமிர்தம்
தனதான்யம் தோற்று மமிர்தம்
தாட்டியாம்சுகம் கூட்டு மமிர்தம்
அருந்தவ ஜனகாதிய ரன்றடைந்திடும் சுகந்த வமிர்தம்
இருந்ததனை யிருந்தபடி யருந்திடென பொருந்தமிர்தம் (சங்)

கரணவாதை யொழிக்கு மமிர்தம்
காரணமதை கொழிக்கு மமிர்தம்
பூரணமதிற் செழிக்கு மமிர்தம்
புண்ணியருண்டு களிக்கு மமிர்தம்

திடமுடனறிவே நானென்றிருந்திடென மொழிந்தவமிர்தம்
கடபடமறியாமையையோட்டி கருத்திலூன்றி பொருந்துமமிர்தம்

ஹரிஹர வபேத வமிர்தம்
அடைந்தவர்க்குச் சுபோத வமிர்தம்
சரியென்றெவருஞ் சாற்று மமிர்தம்
முக்கியமாயொன்றுரைக்க முமுக்ஷுகளுணரு மமிர்தம்
பக்குவமடைந்திடவேங்கிடன் பருகும் அமிர்தம்
எவர்க் கும் சுகிர்தம். (சங்)

---

## கீர்த்தனை.

(இராகம் எதுகுலகாம்போதி—ஆதி தாளம்.)

### பல்லவி.

கற்கண்டையுண்ணுங்கள் சங்கரனருட்
கற்கண்டையுண்ணுங்கள் (கற்)

### அநுபல்லவி.

சொற்கொண்டிந்தகற்கண்டு சோர்வடையர்மற்பண்டு
பற்குனருக்குஅன்று பகவானுரைத்ததுண்டு (கற்)

### சரணங்கள்.

விற்குண்டிற்பழகிடும் வீரனென்றிருந்தாலும்
பக்குவமடைந்திடிற் பரமானந்தமுதவும்
திக்கெட்டிலும்விஜயம் செய்தளித்தகற்கண்டு
தீரமுடனுணர்ந்தால் சிற்சுகம்நமக்குண்டு (கற்)

திரிவிததாபத்தை தீர்த்திடுங்கற்கண்டு
கருவிலுராமலென்றுங் காத்திடுங்கற்கண்டு
பரிபூரணமென்றும் பலித்திடுங்கற்கண்டு
பார்க்குளிதைப்போலுண்டோ பரவிடிற்சுகமுண்டு (கற்)

நித்திய வநித்திய நிருமதகற்கண்டு
நிரதிசயானந்தம் நீங்கிடாதவர்க்குண்டு
சத்தியமளித்திடுஞ் சமரசகற்கண்டு
சார்ந்தவர்க்கெந்நாளும் சாஸ்விதகற்கண்டு (கற்)

பின்னுமுன்னுமென்னாளும் பேசிடுங்கற்கண்டு
பெத்தமகன்றவர்க்கு பெருமிதகற்கண்டு
இன்னுமென்னசொல்லினுமேற்றிடுங்கற்கண்டு
இனிக்கும் வேங்கிடனுக்கும் எல்லோர்க்குமித்துவுண்டு. (கற்)

---

## பதரீநாத ஜோதிர்மடம் ஸ்ரீமத் தோடகாச்சாரியர் தோத்திரம்.

### தோடிராகம். விருத்தம்.

திங்களுலவுஞ் சடைச்சங்கரன் தேவர்குறை
 தீர்க்கவே யன்றுவருநாள்
தேசொடுகலந்தநீ யெம்மொடுவடியவர்கள்
 தீவினையகற்ற வென்றே
மங்களமுடன்வருக வென்றருளவேதாந்த
 வித்தென மகிழ்ந்துரைந்து
மாசிலா அத்துவித மார்க்கமே மார்க்கமெனி
 மற்றவிதமூர்க்க மெனவே
தங்குபுகழானந்த கிரியெனவியற்பெயர்
 தரித்து வித்தரணியேற்றத்
தாழாதுமிகவுமுயர் சங்கரர்க்காளாகச்
 சமைந்து தாளடிபணிந்து
துங்கமிகுதோடக மெனுஞ்சீருரைத்திடத்
 தோன்றுமிதுவே பெயரெனத்
தோடகாசார்ய நின்னுடகப் பதம்பெறத்
 தோத்திரித்தே னருள்வையே.

---

## கீர்த்தனம்.

(இராகம் தோடி—அட தாளம்.)

பல்லவி.

உத்தரதிசை பதரிகாச்ரமம் உபரிஜோதிர்மட வாசர்
எத்தகையினு முத்தமமிகும் அத்துவிதவிலாசர் (உத்)

அநுபல்லவி.

துணையடிபரவிடயருள்பவர் ஸ்ரீமத் தோடகாச்சாரியர்
யிணையொருவருமிலை யெனவனுதினமெனை யாள்பவர் ஆரியர் ()

சரணங்கள்.

சத்தொடு சித்தானந்த மீதெனச் சாற்றிடுங்குணசாந்தர்
நித்திய மிதனித்தியமென நிருபித்தகனவேந்தர்
சாதுக்களுட னுறவாடிடுபேர்களை யோர்நாள்விடாது
பாதுகாத்தவர்க்கிருந்த வேதைதீர்த்தருள் சுரந்த (உத்)

தானேதானய்விளங்குந் தற்பதமுறுஞ்சீலர்
வானோர்களெந்நாளும் வணங்கும் வன்னுங்கோலர்
தானந்தமிலாதநேம ஆனந்தகிரியார் நாமம்
சாற்றிடுவார்களின் தீவினை மாற்றிடுவார்களென்றேநினை (உத்)

குருபணிவிடைக்கேகவந்நா ளுறுமவர்க்குபதேசநந்நாள்
பெருவதற்கிலையே யென்றெண்ண முருவதாற்குருவேநன்றென்ன
தோடகமெனுஞ்சீர்பாடிட தோடகரெனும்பேர்சூடிட
வாடகமெனும்பதம்நாடிட வடியேன்வேங்கிடன்கூடிட (உத்)

---

## துவாரகாநாத சாரதாமடம்
## ஸ்ரீமத் ஹஸ்தாமலகாச்சாரியர் தோத்திரம்.

இராகம் பைரவி. விருத்தம்.

கங்கைமுடிதங்குசிவ சங்கரார்க்கருகராய்
கருணையொ டுகந்துவன்று
கரதலா மலகமென வுரைத்தந்த கடவுளை
கடைய னீடேற வின்று

துங்கமிகு மத்துவித மெதிலுமுத்தமமென்று
தோன்றவருள்செய் தூயனே
தொன்று தொட்டின்றுவரை யுண்டுறங்குவதலது
துவிதமிது வத்துவிதமீ
தெங்குநிறைகின்றதிது வென்றறியமதியிலா
தேங்கியிதுநாள் வரையிலும்
ஏதேதுநீதுக ளெத்தனைவிதங்களினு
மினையாமலே புரிந்தேன்
புங்கமிகுமாசிரிய ருக்கஸ்தவமலகப்
போதமுறை யதுவே பெயர்ப்
பூண்டகுருவே யெனை யாண்டருளவேண்டிமிக
போற்றினே னேற்றினேனே

---

## ஓரடிக்கீர்த்தனம்.

(இராகம் பைரவி—ஆதி தாளம்.)

### பல்லவி.

உலகினில் துவாரகை சாரதாமடமே
உயரஸ்தாமலகாசாரிய ருளுமிடமே (உல)

### அநுபல்லவி.

குலவு குடதிசையில் குரு உரைப்படி நிதம்
வருமடயவர்களுக் குருமிடியகற்றுட (உல)

### சரணங்கள்.

நிலவுலவியதிரு நீர்மலிவேணியன்
கலையொடுமழுவரவே நரும் பூணியன்
சிலையெனவடமலையே யொருபாணியன்
மலைவருமனமதியிலே யுருங்காணியன்
ஜெககுரு வெனவென்றே பெரும் போதவருடன்
மிகுநன்றே யெழுந்தே

யிதுபரசுக மன்றே யடைந்தோ
ரகமகிழவு மின்றே திடும்படி
கரதலாமலக மெனுமுறைதந்தே கரவிலாதனிலமெனவுமெழுந்தே
பரவுதொண்டர்களி னிதய முகந்தேவுரவு கொண்டவர்கள்
வினையை யிகந்தே
பாக்கியமேதரும் யோக்கியமேயுரும் சிலாக்கிய மெனரும்
வாக்கியமே பெரும்
பாதபங்கஜமே யடைந்திட ரோகபந்தமுமே யிடைந்திடும்
வோதருந்தவுமே மிகுந்திட வரதர்மபலவேங்கிடன் பெரும்
(உலகினில்)

---

## ராமநாத் ஸ்ருங்கேரிமடம்.

## ஸ்ரீமத் சுரேஸ்வராச்சாரியர் தோத்திரம்.

(இராகம் காம்போதி. விருத்தம்.)

திரிபுரமெரித்த பரனொரு சிரமருத்தருள
தேர்ந்துலக சிருட்டிசெய்தே
தெளியாத சீவர்கட் கொளியாத வேதாந்த
தேறலை யறுத்தி யென்றும்
அறிவுர விருத்தி சுகமடியவர் கருத்திலுறு
மானந்த மான முதலே
அத்துவித மதமெதிலு முத்தம மிதன்றறிய
வரவ லொடுமன்றுமிதுநாள்
தெரிவரியவுத்தமர்க டிருவடியிணைப்பணிய
திறமரிகிலே னமலனே
ஜெகத்குரு சங்கராச்சாரியருடன் கரும
சித்தாந்தமே செய்தவா
பரிபுரபதத்தனே அடியவருளத்தனே
பகருமண்டின பண்டிதா
பாரதிய வார்த்திக மெனுஞ்சீருரைத்தவா
பதமருளி யெனையாள்வையே.

## ஓரடி கீர்த்தனம்.

(இராகம் காம்போதி—ஆதி தாளம்.)

பல்லவி.

இராமேஸ்வரம் ஸ்ருங்கேரிடம்
ஸ்ரீ சுரேச்வராச்சாரியுருக் கிடம்.

அநுபல்லவி.

தராதலத்திநல் லோர்புகழ்ந்தேத்திடும்
சராசரத்திலெல்லா மாகிநிறைந்திடும்
பராபரத்திலெல்லை யாவுமறிந்திடும்
சுராசுராதி எல்லோரும் மகிழ்ந்திடும் (இரா)

சரணம்.

புராந்தகன் அன்று நன்றிதென்றுலக
பிராந்திகன றவந் திருந்த மலக
மீதாமென்று வேதாந்தவத்துவித
சதாமங்கள மிதென்றும் சாச்வத
மாக்கவரும் போதவருடன்வந்தே
பாக்கியமுறும்படி யாகவுவந்தே
வாக்கியமெனுங் கருமங்களிகந்தே
யோக்கியமெனத் தருமங்களுகந்தே
முண்டகமதனி லிருந்தெழுந்துசுக
மண்டினபண்டித பெயரடைந்துமிக
வண்டினதொண்டர்க டுயர்கடிந்துவிட
யங்களிருந்த விடங்களைந்துவிட
வார்த்திகமெனுஞ்சீ ருரையுரைத்தவர்
பூர்த்தியாய் வேங்கிடன்குறை தவிர்த்தவர் (இரா)

## ஜகந்நாத கோவர்த்தனமடம்
## ஸ்ரீமத் பத்மபாதாச்சாரியார் தோத்திரம்.

(இராகம் தோடி—விருத்தம்.)

பணியணிகறைக்கண்டர் நணிபரிவுறத்தொண்டர்
படுமிடற்காற்றுமலே
பாரறிய சங்கராச்சாரிய ரெனப்பெயர்
படைத்துவிப்பரத கண்டத்
தணியெனவிருந்தபொழு தெணியவருடன்வந்த
வாயனே மிகுதூயனே
அச்சுதா முகுந்த கோவிந்த வைகுந்தனே
அரவிந்தமிருபாதனே
பிணியுடனுழன்றுதின மனையாதிகங்களாற்
பிணிப்படும் பேதையேற்கும்
பிரக்ஞானமேபிர்ம மென்றறியவேதாந்த
பீடிகையளித்தகுருவே
தண்ணிவாவிருந்தடிய ரெந்நாளுமேற்றிடுந்
தவமிக்க ஜெகநாதமே
தங்குபுகழெங்குமுயர் துங்கமிருமடியிணை
தந்துரக்ஷியு மையனே.

---

### ஓரடி கீர்த்தனை.

(இராகம் தோடி—ஆதி தாளம்.)

பல்லவி.

ஸ்ரீ ஜகந்நாதம் கோவர்த்தனமடம்—திகழ்
பத்மபாதாச்சாரியருக் கிடம்.

அநுபல்லவி.

சீர்மிகும்வேதாந்தம் சிறந்திடும்போதாந்தம்
பேர்மிகும்நாதாந்தம் புகழ்ந்திடுமேகாந்தம் (ஸ்ரீ ஜக)

சரணம்.

கார்நிறத்த திருமேனி யுற்றுவளர்
சீர்முகுத்தபெருமானே யிற்றையுடல்
நீர்நிலத்தொடனலாகி மிக்கவுயர்
நேர்வகுத்தனிலவானமொக்கபெயர்
இப்படியாமிதி லேனேவீணே
மெய்ப்படி யாரிடமேனே போனே
னெப்படியாமிது தானே காணேன்
ஒப்பிடலாகுமோ தேனே ரானே
கங்காதரனென் றொருநாள்மிக
சிங்காரமிதென் றிருளேகெட
சங்கர வாச்சாரியார்உற
துங்கமதா யாரியர் நீர்வர
தொண்டுபுரிந்திடவே தேவரும்
கண்டுமகிழ்ந்திடவே யாவரும்
மண்டியிருந்திடவே மேவரும்
புண்டரிகந்தனையே நீரடைந்
தகிலொடு சந்தன மிகுந்தவாற்றினில்
துகில்கொடு சென்றிட முகுந்தபேற்றினில்
அகமகிழவுமதில் நடந்துபற்றிட
முகையவிழிதழொடு பதங்கடைந்திட
கமலபாதரெனப் பெயர்பாங்குடன்
விமலபோதமதைப் பெறவேங்கிடன் (ஸ்ரீ ஜெகந்நாதம்)

ஸ்ரீ சங்கரபகவத்பாதாச்சாரியர் திருவடிகளே சரணம்.

---

## பிர்ம்மநிஷ்டர்கள் தோத்திரக் கீர்த்தனம்.

(இராகம் நோட்—ஏக தாளம்.)

பல்லவி.

ஆனந்தம் ஆனந்தம் பிர்ம்மநிஷ்ட பரமானந்தம்.

அநுபல்லவி.

மோனந்தரு சுகவ்வானந்தம் தானந்தமிலா வானந்தம் (ஆனந்தம்)

சரணங்கள்.

பிர்ம்மநிஷ்ட ஸ்ரீராமகுரு ஸ்ரீமத்பாபு சரஸ்வதிமகராஜ்
பிர்ம்மநிஷ்டபண்டித பீதாம்பரஜீ புருஷோத்தமஜீ மகராஜ் ()

தாதுஜி தயாளோஜி தாதுதயாளுஜி மகராஜ்
தாதுஜி தயாளோர்ஜி ஸாதுநிச்சலதாஸ்ஜி மகராஜ் (ஆனந்தம்)

தனராஜகிரி பரமஹம்ஸ தனராஜகிரி மகராஜ்
ஸ்ரீகைலாஸ மடாதிபதி தனராஜகிரி மகராஜ் (ஆனந்தம்)

தேகோஜீ தேகோஜி தேகோஜி மகராஜ்
தேகோஜி, அவதூதாம்ஸ தேகோஜி மகராஜ் (ஆனந்தம்)

சந்த்ரசேகரோ சந்த்ரசேகரோ சந்த்க்சேகரோஜி மகராஜ்
சந்த்ரசேகரோ அவதூதாம்ஸ சந்த்ரசேகரோஜி மகராஜ்(ஆனந்)

பரமஹம்ஸ ஸ்வாமிகள் ஸ்ரீகோவிந்தானந்தகிரிஜி மகராஜ்
பரமஹம்ஸ ஸ்வாமிகள் ஸ்ரீப்ரகாசானந்தபுரிஜி மகராஜ் (ஆனந்)

பூர்ணானந்தகிரீஜி மகராஜ் புண்ணியராமபுரிஜி மகராஜ்
கருணைநிறைந்திடும் கைலாசமடம் கண்ணியவர்ஜுன கிரிஜி
மகராஜ் (ஆனந்தம்)

தரிசனனீந் தமரேசானந்த
கேசவானந்த உதாஸி ஜீ
பரிசவேதி செய்திடு மிகுமுத்தம
பாலகராம வுதாஸ் ஜி (ஆனந்தம்)

ஸாஹித்தியா சார்யபண்டித்த
தம்மிகாதத் வியாஸஜீ மகராஜ்
லோகத்தினிலெண்டிக்கும் பண்டித
சிவகுமார வியாஸஜி மகராஜ் (ஆனந்தம்)

கண்வ வம்ச பூஷணகடாரி
ராஜதானி நிவாஸி ஜீ
ஸ்ரீமத்பாபு பகவான் வத்ஸ
ஸிம்ஹ வர்மமக ராஜஜீ (ஆனந்தம்)

சங்கரானந்த கிரி ஸ்வாமிகள்
சித்கனனந்த கிரிஜி மகராஜ்
துங்கமிகும் வேதாந்த கேசரீ
துவிதத்வம்ஸ ஹரிஜீ மகராஜ் (ஆனந்தம்)

யஜுர்வேத பாஷ்யகார தயா
னந்தர் திமிர குல பாஸ்கரர்
மஹோபதேசக வித்யாவாரிதி
ஜ்வாலா ப்ரஸாதஜீ மகராஜ் (ஆனந்தம்)

மஹாரிஷி பரமஹம்ஸ தயா
னந்த ஸரஸ்வதிஜி மகராஜ்
மிகவுய ரார்ய ஸமாஜஸ்தாபக
வெகுவித விலக்ஷணஜீ மகராஜ் (ஆனந்தம்)

பாவா காலி கமலீ வாலே
மூவா தேவா ஓ இருகாலே
மேவாதே யேனே புவிமேலே
ஆவா தாவா தே எனுமாலே (ஆனந்தம்)

இருஷிகேசம் இருந்திடநேசம்
எல்லோர்க்கு மிவரால் மிகுவாசம்
ஏனே வென்பார் இதுபஞ்சகோசம்
இதற்கு மேலுரு மதுவிசுவாசம் (ஆனந்தம்)

மாந்தரடைந்திடா தேமாந்திருந்தசுய
வேந்தரெனும் பதமேந்திடவே
தாந்தமுரைத்திடும் சாந்த
மிருத்திடும் காந்தி மகாத்மாஜி மகராஜ் (ஆனந்தம்)

ஸ்ரீமத் பரமஹம்ஸ மாதவா
னந்த ஸரஸ்வதிஜி மகராஜ்
சீர்மிகு குழிசையி லோங்காரமடந்
திகழுறு மதிபதிஜீ மகராஜ் (ஆனந்தம்)

பிரம்ஹநிஷ்டாபரர் திருவடிதுதியதில்
கர்மநிஷ்டம் வரும் வருமெளிதினில்
தர்மமாம் திருவேங்கிடனுரையிதில்
மர்மமாகுமறி வறி வறி யுளமதில் (ஆனந்தம்)

---

## ஸ்ரீமது ஸூதன ஸரஸ்வதி ஸ்வாமிகள் துதி.

### கீர்த்தனை.

(இராகம் மோகனம்—ஆதி தாளம்.)

பல்லவி.

ஸ்ரீமது ஸூதன ஸரஸ்வதி பாதபதுமமே கதியருள்நிதி

அநுபல்லவி.

ஈதுலகவாதனு சுகங்களுமேதென வறிந்திடாதிருந்தனன்
(ஸ்ரீமது ஸூதன)

சரணங்கள்.

வாது செயுமனத்தினது சங்கைய
லாது ஜகமயக்க மென லெங்குவ
தேது வது வெனக்குமய லென்றிட
ஓது குருபதத்தினரு கொன்றிட (ஸ்ரீமது)

காதலுட னுளத்தி னெனதென்பது
ஏதென வதுரைத்திடென வொன்பது
வாயிலுட னிருக்கு மதுவென்பது
தானெனவுமுரைத்திட வறிவீந்தது (ஸ்ரீமது)

பேதமதுவகன் றறிவு மோங்கிட
பேதமதுவிருந் திடவு மிங்கித
போதமது அருந்திடென வேங்கிட
மாதவனடி படிந்திருளும் வாங்கிட (ஸ்ரீமது)

---

## ஸ்ரீமத் வித்யாரண்ய ஸ்வாமிகள் ஸ்தோத்திரம் கீர்த்தனை.

(இராகம் காபி—தாளம் ஆதி.)

பல்லவி.

ஸ்ரீமத் வித்யாரண்ய ஸ்வாமிகள் திருவடிகளே சரணம்

அநுபல்லவி.

தீவினையகற்றிடும் பாவனையொழித்திடும் திகழுறபவ ஹரணம்

சரணங்கள்.

அஞ்சிடாது சுக மிஞ்சிடவெவர்களும்
முஞ்சிட வேண்டி யிடர்
பஞ்சுபடுத்திட பஞ்சதசிஎனும்
மெஞ்சலிலாத திடர் (ஸ்ரீமத்)

நீர் நிலத்தொடனலாகும் மிக்கஉயர்
பேர் படைத்த நிலவான்
சீர் மிகுத்த ஜகமாகு மித்தகைய
தேனுனக்கு விதெலாம் (ஸ்ரீமத்)

என்றுமுள்ளதிது வென்றுமெள்ள வொரு
நன்றுரைக்க வருவான்
அன்று மின்றுமிது வென்று மன்றுளது
பொன்றிடாத வறிவாம் (ஸ்ரீமத்)

நீ சத்தெனவு முபாசித் திருவென
வேதத் துவ மசி மா
வாசகத்தினை யுபதேசித் தென்மனம்
நாசம்வைத்த பெருமான் (ஸ்ரீமத்)

பேதமற்றது வபேதமற்றது சு
போதமுற்ற தினமே
மாதவன டியலாது பெற்றிடவு
மேது பற்று மனமே (ஸ்ரீமத்)

இங்கிதமா மெதிலுங் கனமாமிது
வென்று மத்து விதமே
வேங்கிடனும்பெற வேண்டினே னுதவு
மின்று பத்ம பதமே (ஸ்ரீமத்)
ஸ்ரீசங்கரபகவத் பாதாச்சாரியர் திருவடிகளே சரணம்.

---

## ஸ்ரீமத் நரசிம்ம பாரதிஸ்வாமிகள் ஸ்தோத்திரக்கீர்த்தனை. (சிருங்கேரிமடம்.)

(இராகம் தோடி—அட தாளம்.)

பல்லவி.

ஸ்ரீமத்நரசிம்ம பாரதி சிறியேனை யாதரி (ஸ்ரீமத்)

அநுபல்லவி.

திருவடி யருள்புரி இது ததி (ஸ்ரீமத்)

சரணங்கள்.

பூமியின் மானிடராய்ப் பிறந்தும்
புண்ணிய பாவமிதுவென் றறிந்தும்
நேமமிது வென்றுரைக்கத் தெரிந்தும்
நின்றே னில்லை என்னவிருந்தும் (ஸ்ரீமத்)
விடய சுகங்களிடரென் றறிந்தும்
படவதில் மனம் திடமாய் பொருந்தும்
கட னிதுவென்னக் கழலினை தந்தும்
இட ரகற்றிட எந்தைநீ யிருந்தும் (ஸ்ரீமத்)
கேசரீ லம்பிகை இதுவென
பாசமொடு ஷண்முகி இதுவென
வாசகமுரைத் திடுவேன் என்மனம்
லேசமும் பற்றுவதிலை யேகன (ஸ்ரீமத்)
ஆரா தாரத் தளவி றகடந்து
நேரா யிருக்கும் நிலையைத் தெரிந்து
பாரா யிது பக்குவமென் றறிந்து
காராய் எனக்குக் கருணை புரிந்து (ஸ்ரீமத்)

சீர்மிகும் சிருங்கேரிமடம்
சிறந்திடும் வித்யாரண்யரிடம்
பேர்மிகவுரும் திருவேங்கிடம்
பெத்தமகன்றிட முத்தியருளிடும் (ஸ்ரீமத்)

---

## ஸ்ரீபிரஹ்ம புஷ்கரத் தோத்திரக் கீர்த்தனை.

(இராகம் சங்கராபரணம்—அட தாளம்.)

### பல்லவி.

ஸ்ரீபிரம்ம புஷ்கரவாசம்—சுகம் (ஸ்ரீபிரம்)

### அநுபல்லவி.

ததியினி லுதவிடும் ஸன்னியாஸம் (ஸ்ரீபிரம்)

### சரணங்கள்.

பரமஹம்ஸ பிரஹ்மானந்த
சரஸ்வதி யுதவிடுமேகாந்த
நிரதிசயானந்த முந்த
வரவிடு மெவர்களுமுகந்த (ஸ்ரீபிரம்)

தாமிகும் ஜகாத்ரிஹரீ
தத்பண்டித வித்யாநிதி
பரமானந்த மருள்தயாநிதி
பார்க்குளிதைப்போலுண்டோ வேறேகதி (ஸ்ரீபிரம்)

வாமதேவ தீர்த்தஸ்வாமி
வரமுதவிடும் யோகநேமி
காமமகலக் கண்பார்ஸ்வாமி
கதியடைவதற் குகந்தபூமி (ஸ்ரீபிரம்)

மனை மகவெனு மதிலிருந்து
நினை வகன் றறிவிருள்செறிந்து
கனமிகும் குருவருள் மறந்து
மனமிருந்ததை விடுவிறைந்து (ஸ்ரீபிரம்)

சுகமுற விருந்திடலா மின்று
வகம்பிரம்மம் என்றிருந்தா லென்றும்
இகமதி லிதையடை தல்நன்று
தகுமிது வேங்கிடனுள மென்றும் (ஸ்ரீபிரம்)

## மனத்தோடறிவுறுத்தல் கீர்த்தனங்கள்.

1. (இராகம் காம்போதி—ஆதி தாளம்.)

பல்லவி.

புண்ணியமுண்டு மனமே—சங்கரகுரு
பொன்னடியண்டு குணமே தொண்டுதினமே (புண்ணியம்)

அநுபல்லவி.

எண்ணிலாதவர்க்கருள் பண்ணும்சங்கரனடி
நண்ணியனுதினமு மெண்ணிநீயிருந்தால் (புண்ணியம்)

சரணங்கள்.

நித்தியவனித்திய வஸ்துவிவேகம்
மத்தியவிகபர போகவிராகம்
சத்தியமாம் ஷட்ஸமாதிவைபோகம்
முத்தியுங்கூட முமுக்ஷுத்துவமாகும் (புண்ணியம்)

ஸாதனசதுஷ்டய சம்பத்துண்டாக்கும்
தீதெனுந்திரிவித தாபத்தைப்போக்கும்
வாதனையில்லாதுணை யென்றுங்காக்கும்
போதமதையருளி புனிதமுண்டாக்கும் (புண்ணியம்)

பேதமகற்றிஎன்றும் பெருமையுண்டாக்கும்
காதலுடனறிவிற் கலந்திடனேக்கும்
வேதமுதலிறுதி விளங்கிடத்தேக்கும்
ஆதாவுடன்மிகவருள் நிறைவாக்கும் (புண்ணியம்)

அழிவறுமோனமெய்ஞ் ஞானமுண்டாக்கும்
கழிதருமானவஞ் ஞானத்தைப்போக்கும்
வழிவருமத்துவி தானந்தமாக்கும்
ஒழிவருசித்த சுகானந்தமேற்கும் (புண்ணியம்)

பரவெளியாமதிற் பாங்குடன்யாரும்
பெரவெளிதாமிதி லோங்கிடநேரும்
நிரதிசயானந்தம் நீங்கிடாதோரும்
உரவிதிதுதானென்றும் வேங்கிடன் கோறும் (புண்ணியம்)

---

2. (இராகம் தன்யாசி—தாளம் ஆதி.)

பல்லவி.

தினமும்நினை மனமே ஸ்ரீசங்கரனிருபதமே (தினமும்)

அநுபல்லவி.

தினமும்நினை—மனமேஉனை
கனமாக்குமது—புனிதம்செய்தனு (தினமும்)

சரணங்கள்:

இனமேயறிந்து குணமேபுரிந்து
நினைவோடிருந்து மனமேபரிந்து (தினமும்)

பஞ்சகோசம்விட்டு மிஞ்சமதைத்தொட்டு
கொஞ்சமேனும்பட்டு வஞ்சமானதைவிட்டு (தினமும்)

புரியும்மயலே தெரியும்பயலே
அறியுமறிவை யறிவ தியலே (தினமும்)

சத்தொடு சித்தானந்தம் சமப்படும் நிசாந்தம்
மத்தியமொடு வேகம் மாக்ஷிமிகும் வைபோகம் (தினமும்)

அசல மப்ரமேயம் அசரீரம் அனுமம்
அசடம் மகண்டம் அத்துவித வதிதம் (தினமும்)

நித்தியம் பூரணம் நிதானம் பரமார்த்தம்
சத்தியம் கேவலம் சனுதனம் தற்போதம் (தினமும்)

சாங்கியமெனல்வோட்டு திங்ககலப்பாராட்டு
பாங்குடன் மறைப்பாட்டு வேங்கிட னுரைகேட்டு (தினமும்)

---

3. (இராகம் தேசிகதோடி—தாளம் ஆதி.)

பல்லவி.

விட்டு விடநாளு கிட்டினது கேளு மனமே யினிகேளு

அநுபல்லவி.

கெட்டகேடுன்னோடு பட்டபா டின்றோடு (விட்டு)

சரணங்கள்.

துட்டர்களோடுறவு பட்டிதுநாள்கரவு
மட்டல்லவேதுறவு பட்டுவுன்னோடுறவு (விட்டு)

ஆசையெனும் நேசனுடன் பேசிவிசுவாசமானாய்
கோசமதில் வாசமுற்று பாசமுடன்மோசம்போனாய் (விட்டு)

தாரமெனுங்கோரமதில் பாரமொடென்னேரமுற்றாய்
சீரறியா தோரையுற்று தீரமுடன்சோரங்கற்றாய் (விட்டு)

போதவானந்தமருள் மாதவானந்தகுரு
சீதமிகும்பதுமபாத மதேயாதரவாய் (விட்டு)

தாங்கொணா தின்றோடெனக்கு தீங்கெலாம் நன்றோஉனக்கு
பாங்குரைத் தாலேன்பிணக்கு வேங்கிடன் சொல்லாலென
க்கு (விட்டு)

---

4: (இராகம் தோடி—அட தாளம்.)

பல்லவி.

ஓஹோ வின்றல்லவோ
வுணர்ந்தேன் உன்றன்மோசம் மனமே (ஓஹோ)

அநுபல்லவி.

உதவாதினியுன்றன்சகவாசம் யுலகினிற்புரிகின்றார் பரிகாசம் (ஓ)

சரணங்கள்.

ஆஹா வனியாயமாயெனை யாரென்றறியாமலேவினை
யகந்தையினி லுகந்துமிக மகிழ்ந்துசுகமிழந்தனையே
ஜகந்தனிலே யிகழ்ந்திடவே புகழ்ந்ததிலே விருந்தனையே (ஓ)

மாதோடிருந்திருந்து நீ தினம் ஏதோசுகம்பொருந்தினயினம்
வற்றிடுமெனும்பினையோர்காய் பற்றிடும்வகையே நீபோனாய்
உற்றிடுமுருசியைகாணாய் கற்றனையே நீவீணாய் (ஓஹோ)

அகிலமும்வேறுக்கினையே யானலறிவாயோ பேயே
அண்டாண்ட புவனங்களு மெண்டிசைகளுநீயாயினை
யென்ற றிந்திருந்திடாமலேனோ நீவீண்போயினை (ஓஹோ)

ஆடுகின்றவனும் ஆட்டுகின்றவனும் ஆடல்கண்டவனும்நீயே
நாட்டுனிலிம் மொழியெங்குங் கேட்டினிமேல் வழிதங்கும்
பாட்டினிலோடாதேயெங்கும் தாட்டியாய் நீயங்குமிங்கும் ()

பாசமேயென்றும் மோசமேதனம்
கோசமேயென்றும் நாசமேகனம்
பாங்குடனின்னுளிருந்து மேங்கிடவீண்போனையே
ஓங்கிடநன்னுள்பொருந்தும் வேங்கிடன்சொல் கேளாயே ()

---

5. (இராகம் நாத நாமக்கிரியை—தாளம் ஆதி.)

பல்லவி.

ஊருக்கு ளுனைப்போல யோக்கியரில்லை
ஒருமொழியுரைப்பதிலேன்மதி வல்லை—மனமே (ஊரு)

அநுபல்லவி.

ஆருக்கடுக்குமிது அவசரநிமித்தமாய்
அண்டிவந்து யெனைக்கண்டிதப் படுத்தினாய்
பேருக்குமாத்திரம் பெரியவனென்கிறாய்
பெத்தமடையவின்று உத்தேசித்திருக்கிறாய் (ஊரு)

சரணங்கள்.

பார்த்திருந்தும் உனை பாவியேனோநம்பி
பக்ஷமுரைக்கலானேன் மனமே
ஊத்தையொதுங்குமிடங் காத்திருந்துவதில்
உறுதிவைத்தாய் ஏனோ மனமே
நேத்திருந்ததுதானே இன்றைக்கிருக்குமென

நினைந்துபாராமலேனே வீணே
நேர்த்தியதினுமிது நேர்த்தியெனவும்பேதம்
நினைந்து நினைந்துருகினய்தானே (உளரு)

நாலுபேர்களாய்க்கூடி நன்மையடையநாடி
நாட்டினிலிருப்பதுண்டு கோடி
மேலுமுங்களைப்போல வீணுக்கலைந்தவர்கள்
மேதினியி லில்லை யெங்குந்தேடி
பாலும்பழமும் வெல்லப் பாகும்புசித்துலகில்
பாங்குடனிருக்கின்றூர்கள் பேடி
போலுமொன்றுக்கு முதவாத வீண்புரட்டுகள்
புரிகின்ருயே யெங்கெங்குமோடி (ஊரு)

என்னென்னவிதமாகச் சொன்னபோதிலும்தை
யேன்மறந்திருக்கிளு யிந்நாளில்
சின்னதனமோவுனக் கென்னவதனல்வரும்
சீரறிவாயோ வந்தோ முந்நாளில்
மன்னவனுருந்தாயு மானவர்உன்னைவெகு
மதிப்புவைத்திருக்கிறுர் யெந்நாளில்
உன்னதப்பதவியி லுய்யும் வகையறிவாய்
யுத்தமர்களைச்சேர்வாய் நன்னளில் (ஊரு)

தகைமையுடன்சாந்தமும் தாட்சண்யமுமிலாது
தவித்திடலாளு யிதுதா னேனே
பகைவனென்றுலெனக்கு பட்சமுடனுனக்கு
பற்பலவிதமாகச் சொல்வேனே
வகையுடன் சிகைகெட்டு வன்னப்பூணூலும்விட்டு
வாணிபத்தலைவனு மாவானே [றன்
தொகைகூட்டிச்சொல்லவென்றுல் தோணுமோ தோணுதுன்
துஷ்டத்தனமின்னமுமேனே (ஊரு)

பாந்தமுடன் தரும வேந்தனுகாமலே யே
மாந்துகிடந்தாய் மதிவல்லையே

மாந்திவிடயசுக மேந்தியிருந்தனையே
வாந்தியிடவு மனமில்லையே
சாந்தம் விடாதெனை யேகாந்தமுடனணைந்து
வேங்கிடனுரைப்படி யில்லையே
யெந்தவிதமு மாதவானந்த ரடியிணையிற்
சொந்தமுடனிருவென் சொல்லையே (ஊரு)

---

6. (இராகம் தோடி—அட தாளம்.)

பல்லவி.

ஹிமாலயாசலமே கண்காணிற் பாப
மிருந்திடா தடைந்திடலாம் நலமே (ஹிமால)

அநுபல்லவி.

ஸ்ரீமான்குரு ஜகத்தினில் மாதவானந்தர்
நேமமுடன் சென்று கண்ட
நினைவி லிருந்தின்று விண்ட (ஹிமால)

சரணங்கள்.

பூமானுறையும் நேபாளம் புண்யமிகும் கூர்மாசலம்
தாமஸராசத மடங்குங்கேதாரம் தக்கஜலந்தரம் மிக்காஸ்மீரம்
பஞ்சதலங்களுள்ளது பார்வதியவதரித்திருந்தது
கொஞ்சுமஞ்சுகங்கள் பிரணவங்கூடி யாடிபாடியுள்ளது (ஹி)

ஸ்ரீமத்பசுபதீசுவரர் துங்கநாதம் ஜ்வாலாமுகி
ஆபத்பாந்தவளாமெனை யாதரித்திடநீயேகதி
சீர்மிகும் ரிவாலேசுவரம் சிறந்திடும்பஞ்சமூர்த்திவாசம்
பேர்மிகும்சூரியபார்வதி பிர்ம்மவிஷ்ணுருத்திரநேசம் (ஹி)

தற்பதமருள்மன்மகேசம் தப்ததீர மணிகர்ணிகா
ஜர்ஜாநதிகரைநிவாஸம் வைஷ்ணவிதேவி யமரநாதம்
பிரமண்டலம் திரிவேணி பார்வதிக்குபதேசக்காசி
தரமிகுமானஸ ஸரஸு தக்க மிக்ககைலாஸம் (ஹிமால)

சீர்மிகுங்காஸ்மீரதேசம் சிறந்தஜம்பூபதிமஹாராஜா
பேர்பெரும் நேபாளராஜா பிரபலமிகும் டிஹரிமகராஜா
சிவசிவஹரிஹரசம்போ கங்காதார கோவிந்தா
பவமிகஹரஹரிவேங்கிடன் பவபாஸ்கரவரவிந்த (ஹிமால)

---

## ஹிமாலயாதி க்ஷேத்ரானந்த நாமாவளி.

ஹரசம்போ சிவகோவிந்தா நரசிங்கா
கங்காதரா ஹரி ஹரசம்போ [தனு
திரிமலதகனு பவஜலமர்த்தனு பரிபூரண பதமளித்திடும் நிர்த்
அருமையிலருமை மானிடமே அகத்தியஞ்செய்திடு பூவலமே
திருவளர்பஞ்சாப் பமிர்தஸரஸ் மருவிலாபெருமித குருநாநக்
அயோத்தியா பிரயாகா காசி அபரூபம்கயா' வது விசுவாசி
வயித்தநாதம் கங்காசாகரம் வந்திடுவாய் கபிலாஸ்ரமம் (ஹர)
குதிகொளும் கல்கத்தாகாளிமாயி கோரக்கபூர்கோரக்கநாத
மிதிலாபுரி ஸ்ரீஜனகமகராஜா ஸ்ரீசுகமஹரிஷி ஞானோபதேசா()
உத்தமமேமிகும் காமாட்சிதேவி புத்தமஹரிஷியாஸ்ரமம்
சித்தமகிழ்ந்திடும் நாராயணசரோ பக்திமிகுந்திடுமபாரம் ()
ஜானகடகாம் கிரனரசலம் சூக்குமமிகும் புண்யரிதில்குசலம்
தானுகும்ஞானமே ஸ்வரூபம் தத்தாத்ரேயவதூ தாம்ஸம் ()
ஸ்ரீமத் மதுரா ப்ருந்தாவனம் கோகுலம் கோவர்த்தனம்
தசரதகுமார லக்ஷ்மணபுரிதபமிகும்நைமிசாரண்யம்' (ஹர)
பற்றிடுமிஸ்ரீ ததீசிகுண்டம் பரதபூர கேகயராஜ்யம்
பக்திமிகுந்திடும் சித்திரக்கூடம் பார்த்திடும்ஸ்ருங்கிவேரபுரம்
சுத்தம் சரபங்காஸ்ரமம் சுகமேசுதக்ஷணாஸ்ரமம்
எத்தலமும்புகழ் அகஸ்தியாஸ்ரமம் யேற்றிடுநாசிகாபஞ்சவடி
கிஷ்கிந்தா விந்தியாசலம் ஸ்வயம் பிரபாகுகா ஸ்ரீசைலம்
இஷ்டமிகுந்திடும் மல்லிகார்ஜுனம் எழுமதில்விளங்கும்
குத்தாலம் பாபநாசனம் கன்னியாகுமரி சுசிந்திரம் [ஸ்ரீரங்கம்
குணமிகுவர்க்கலா வனந்தசயனம் பத்மநாபம் ஜனார்த்தனம்()

சிலம்உள ஆரம்உளகிருஷ்ணன் ஸ்ரீ திருவல்லம் சபரிமலை
சிறந்திடும்ஐயப்பன் ஏற்றுமானூர் கழுத்திருத்திவைக்கத்தப்
[பன்(ஹர)

திருவஞ்சிக்களம் கொடுங்கலூர்தேவி
சீர்மிகும் ஸ்ரீகாலடிதனில் மேவி
இருமைக்கொளும்சுகமிருந்திடத்தாவி
ஏற்றிடு ஜகத்குருயினையடிகோறி (ஹர)

பேர்மிகுங்குருவாயூர் கிருஷ்ணன்
பெருமைபெருவளையநாடுபகவதி
சீருறும் கோட்டியூர் வடக்கீஸ்வரர்
திருச்சிவப்பேரூர்வடக்கு நாதன் (ஹர)

பாரதப்புழை திருவில்வாமலை
பக்குவத்திருநெல்லி சிறுக்குண்ணு
சீரதாம்அன்னபூரணிநீலேஸ்வரம்
சிறந்திடும் கொல்லூர்மோ காம்பி (ஹர)

உடுப்பிகிருஷ்ணன் சுப்ரமண்யம்
உகந்திடும்கோகர்ணம் உயர்ந்திடும் புண்யம்
அடுத்திடும்ஜயசுப மாபலவீஸ்வரர்
மலரடிபடியது வேமிகு புண்யம் (ஹர)

எத்தனையாயிரம் எத்தனையோதலம்
அத்தனையும் புருவமத்தி யில்மாபலம்
முற்றிடுமிதுவே கோகர்ணம்
சித்தமகன்றிடு மாவரணம் (ஹர)

சுழுமுனையேமுக்யதீர்த்தம்
சுழுமுனையேமுக்யசுஜயம்
சுழுமுனையேமுக்யமாந்தியானம்
சுழுமுனைத்தா நித்தியானந்தம் (ஹர)

வேதமுழங்கிடுங்கோகர்ணம்
நாதமுழங்கிடுமேதிண்ணம்

வேதருஞ்சுழுமுனையே கோகர்ணம்
இதறிபவன்எவனுகிலும் புண்யன் (ஹர)
ஆதரவாயெனக்கோதிடும் தீதர
போதமளித்திடும் மாதவரும்
கோதிலாததிதுவே சொலுமென்னலும்
ஈதுரைத்ததிருவேங்கிடனும் (ஹர)

---

## மங்களம்.

(இராகம் ஆனந்தபைரவி—தாளம் ஆதி.)

பல்லவி.

மங்களம் மங்களம் மங்களம்
நித்ய ஜய (மங்களம்)

அநுபல்லவி.

மங்களம் கஜமுகற்கும்
மங்களம அறுமுகற்கும் (மங்களம்)

சரணங்கள்

போதவானந்தமளிக்கும் மாதவானந்த சுவாமிக்கும்
காதலாகவே வேதாந்த மோதவந்த மாதவர்க்கும்
(மங்களம் மங்களம் மங்களம்) 1

பதரிகாசிரமத்தி லுற்றநம்பூதிரியற்கும்
பதரிநாராயணற்கும் மற்றும் விசாலாவுக்கும்
(மங்களம் மங்களம் மங்களம்) 2

ஆதாரமாயெவர்க்கும் தீதானதையொழிக்கும்
பாதங்களேயளிக்கும் ஸ்ரீகேதாரேஸ்வரர்க்கும்
(மங்களம் மங்களம் மங்களம்) 3

பண்டுகேசுவர யோகீஸ்வர பைரவற்கும்
கண்டுபிரகலாதரைக் காத்த நரஸிம்மர்க்கும்
(மங்களம் மங்களம் மங்களம்) 4

துங்கநாத ருத்ரநாரதத் தூயகல்பேசுவரர்க்கும்
மங்கள கெங்காளருக்கும் மத்தியமேஸ்வரர்க்கும்
(மங்களம் மங்களம் மங்களம்) 5

ஸ்ரீகைலாஸம் வைகுண்டம் சிறந்திடும் பிர்ம்மலோகம்
பேர்மிகுந்திடும் சிவப்பிரமம் நாராயணர்க்கும்
(மங்களம் மங்களம் மங்களம்) 6

மங்களம் ஜைமினி மஹரிஷிக்குமங்களம்
மங்களம் வேதவியாஸ மஹரிஷிக்குமங்களம்
(மங்களம் மங்களம் மங்களம்) 7

மங்களம் கௌதம மஹரிஷிக்குமங்களம்
மங்களம் கணாத மஹரிஷிக்கு மங்களம்
(மங்களம் மங்களம் மங்களம்) 8

மங்களம் கபில மஹரிஷிக்குமங்களம்
மங்களம் பதஞ்சலி மஹரிஷிக்குமங்களம்
(மங்களம் மங்களம் மங்களம்) 9

ஸ்ரீசங்கரகுரு சுரேஸ்வரர்க்குமங்களம்
ஹஸ்தாமலகர்க்கு மங்களம் தோடகர்க்குமங்களம்
பத்மபாதர்க்குமங்களம்
(மங்களம் மங்களம் மங்களம்) 10

சுத்தமிகும் ஜோஸ்யம் உத்ரகாசிரிஷிகேசம்
சத்யநாராயணம் ஹரித்வாரம் ஸப்தசரோவர்க்கும்
(மங்களம் மங்களம் மங்களம்) 11

ஸனக ஸனாதன ஸநந்தன ஸனற்குமாரர்
தனையறிந்தே தினமும் கனமிகுமுத்தமர்க்கும்
(மங்களம் மங்களம் மங்களம்) 12

மங்களம் பாணினி மஹரிஷிக்குமங்களம்
மங்களம் கோவிந்தா சாரியர்க்குமங்களம்
(மங்களம் மங்களம் மங்களம்) 13

மங்களம் வரருசி மஹரிஷிக்குமங்களம்
மங்களம் பர்த்ருஹரி மஹரிஷிக்குமங்களம்
(மங்களம் மங்களம் மங்களம்)

உத்தம இமாலயத்தி நற்றவ ஸாதுக்களுக்கும்
எத்திசையும்புகழ் பாவா காலிகமளுவாலேவுக்கும்
(மங்களம் மங்களம் மங்களம்)

அத்வைதமதத்தினி லவதரித்திடும்புண்ய
உத்தமர்களுக்கும் மிகக் கற்றவர்க்கும்நித்யகெண்ய
(மங்களம் மங்களம் மங்களம்)

ஸ்ரீ பதரீ நாராயணபக்திரஸாம்ருத
பஜனை கீர்த்தனை முற்றிற்று.

---

ஸ்ரீபதரீ நாராயண கேதாரேசுவரர் திருவடிகளே சரணம்.
ஸ்ரீதுவாரகாநாத பதரீநாத ஜெகநாத ராமநாத

ஸ்ரீ சுவாமிஜிக்கி ஜேய்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

ஓம் தத் ஸத்.

ௐ

# பிழைதிருத்தம்.

| பக்கம் | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 2 | 16 | நிடத்தனி | நிடத்ததனி |
| ,, | 21 | யுரைத்திட | யுரைத்திடக் |
| 5 | 25 | கண்ணிய | நண்ணிய |
| 6 | 7 | யுட்டமைத்துமிக | விட் |
| ,, | 8 | யுவந்தான் | டுவந்தான் |
| ,, | 9 | நன்புருமிகு | யோடின்பமிகும் |
| 7 | 7 | மகிகை | மகிமை |
| 8 | 2 | சங்கரராசாரி | சங்கரவாசாரி |
| ,, | 6 | தான | தால்ன |
| 11 | 22 | ம்ரிக | ம்ருக |
| 12 | 25 | அர | அகர |
| 13 | 4 | அர | அகர |
| ,, | 8 | அர | அகர |
| ,, | 11 | று | றி |
| ,, | 12 | அர | அகர |
| ,, | 16 | அர | அகர |
| ,, | 20 | அர | அகர |
| ,, | 24 | அர | அகர |
| ,, | 26 | வரறி | வாறி |
| ,, | 28 | அர | அகர |
| 14 | 4 | அர | அகர |
| ,, | 8 | அர | அகர |
| ,, | 12 | அர | அகர |
| ,, | 16 | அர | அகர |
| ,, | 20 | அர | அகர |
| 15 | 11 | வேறு | வேரு |
| 16 | 3 | கழி | கழு |
| 18 | 5 | ஜ்வாலா | ஜ்விலா |
| 19 | 13 | பொருந்தும் | பொருந்தும் தலமே |
| ,, | 14 | தலமேமேலாய | மேலாய |
| ,, | 15 | ஞுக்குமம் | ஞுக்குமமே |
| ,, | 16 | வபாரசரஸ்வதி கங்கைசேரிட<br>மதி ஞுக்குமம் | வேதிலாத பிரயாகையிலிருந்<br>து குபேர சிலாபரியந்த<br>மாகு மதிஞுக்குமமே |
| ,, | 17 | குபேர சிலாவிலிருந்து<br>கைலாயம்வரை சுத்தம் | குபேர சிலாவிலிருந்து<br>கைலாய வபாரசரஸ்வதி<br>கங்கைவரையும் சுத்த<br>க்ஷேத்திரமே |
| ,, | 21 | வானில | வானனில |
| 20 | 5 | திமிர் | திமிர |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 23 | 15 | மனதுமலா | மனமதுலா |
| 24 | 2 | யகளங்க | யகளங்கா |
| ,, | 21 | கங்காள | சங்காள |
| 27 | 9 | ரவர்கள் | ரவர் |
| 28 | 24 | இங்கிலீஷ்கோட் | ராஜ ராஜ என்கிற வர்ணமெட்டு |
| ,, | 28 | கிலாதர்ப்பரப் பொருளாகும் | கிலாரய் |
| 29 | 1 | பனே | பணே |
| ,, | 11 | ரரு | ருரு |
| 30 | 16 | கிரங்கிடும் துரையே | ககன்றிடும் திரையே |
| ,, | 17 | திரையே | துரையே |
| ,, | 18 | வர் | வர |
| 33 | 2 | டுள | டுர |
| ,, | 4 | கவர்ந்திட | வெர்ந்திட |
| ,, | 8 | தகன்றிடவனே | கன்றிடவணே |
| ,, | 11 | வாதாடக் கொண்டாய் | அமரகளுல் |
| 34 | 10 | தானென் | தானென |
| ,, | 14 | மறை | மமை |
| 35 | 15 | ஐமுக | அறுமுக |
| ,, | 18 | புணேந்த | புனேந்த |
| ,, | 19 | நேத்ரா | நேத்ரா முன் |
| ,, | 20 | கோவிந்தா | நாராயணு |
| 36 | 18 | படித்து | பிடித்து கொஞ்சம் மொழி படித்து |
| ,, | 26 | மெனலே | மெனவே |
| 37 | 4 | பொருளே | போருனே |
| ,, | 6 | செஞ்சுருதி | செயுஞ் சுருதி |
| ,, | 24 | னெனேத்துணேயோடே வினேத்தனே தொடர்பினுல் | யெனேத்துணே யொடே வினேத் தொடர்பினுல் |
| 38 | 2 | மாலா | மலா |
| ,, | 3 | வேது | லேது |
| ,, | 6 | யாத | யாது |
| ,, | 17 | எனக் கருள்பதவனஜ | ஓ எனக்கருள் யங்கஜ |
| ,, | 23 | கால பவுத்த | கால முள பௌத்த |
| 40 | 5 | சாற்றமமிர்கம் | சாற்றமமிர்தம் சத்திய நித்திய பத்திய வமிர்தம் |
| 42 | 4 | உபரி | உயர் |
| ,, | 15 | வன் னுங் | வன்னியா மெனுங் |
| ,, | 18 | நந்நாள் | னன்னுள் |
| 43 | 20 | வருமடயவர்களுக்குருமிடியக கற்ருட | வருமடியவர்களுக் குருமிடி யகற்றிட |
| ,, | 26 | வென்றே | வன்றே |

178930

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 44 | 9 | வரதர்ம | வர்தநம் |
| ,, | 19 | மிதன் | மிதிதன் |
| ,, | 20 | வரவ | லாவ |
| ,, | 22 | திறமரி | திறமறி |
| 45 | 7 | நல்லோர் புகழ்ந்தேத்திடும் | நல்லோர்யேற்றி புகழ்ந்திடும் |
| ,, | 13 | கண | கன் |
| ,, | 19 | மௌனத் | மௌனுந் |
| 46 | 12 | யாதிகங்களாற் | யாதிகளினுற் |
| 47 | 3 | முகு | மிகு |
| ,, | 10 | தரனென் றெருநாள்மிக | தரனன் றெரு நாள்மிக |
| ,, | 18 | மிகு | மிரு |
| ,, | 19 | முகு | மிகு |
| ,, | 21 | கடைந்திட | கடைத்திட |
| 48 | 8 | தன | தன் |
| | | தன்ருஜ கிரி | தன்ருஜ கிரிஜி |
| ,, | 9 | கிரி | கிரிஜி |
| ,, | 23 | பண்டித்த | பண்டித் |
| 49 | 1 | கண்வ | கான்ஹ |
| ,, | 24 | மேலுரு | மேலுரு |
| 50 | 6 | வரும் வரு | வரும் வரும் வரு |
| ,, | 7 | மாம் | மாகும் |
| ,, | 13 | பதுமமே | பதும மதே |
| ,, | 15 | வரதனு | வாதனு |
| ,, | 24 | தானென | தாதென |
| ,, | 28 | வனடி | வடி |
| 51 | 27 | வனடி | வத்தடி |
| 52 | 20 | கழிலிணை | கழலிணை |
| 53 | 16 | தா | தா |
| ,, | 17 | தத்பண்டித | தத்தபண்டித |
| 54 | 17 | கூட | கூடு |
| ,, | 20 | துணை யென்றுங் காக்கும் | திடணை என்றும் நீக்கும் |
| 57 | 27 | மனமே | முனமே |
| 59 | 17 | மிக்காஸ்மீரம் | மிக்ககாஸ்மீரம் |
| ,, | 26 | காசி | காணி |
| 61 | 7 | யிணை | யிணை |
| ,, | 25 | ஜயம் | ஜபம் |
| 63 | 1 | துங்க நாத ருத்ரநாரதத் | துங்கநாத் ருத்ரநாத் |
| | 16 | சுரேஸ்வரர்க்கு மங்களம் | சுரேஸர் மங்களம் தோடகர்க்கும் |
| ,, | 17 | அஸ்தாமலகர்க்கு மங்களம் தோடகர்க்கு மங்களம் | மங்களம் அஸ்தாமலர் மங்களம் பத்ம பாதர்க்கும் |
| ,, | 18 | பத்மபாதர்க்கு மங்களம் | ,, ,, ,, ,, |
| ,, | 20 | ஜோஸ்யம் | ஜோல்ஸி மடம் |
| 64 | 5 | கமருவாலே | கமலி வாலே |